பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 1 சனிக்கிழமை (18.10.2003) தொலைபேசி - 2223378 ஒலி 303



துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk


## இடைக்கால சபைத் திட்ட வரைபுடன்

# புலிகளின் பிரதிநிதிகள் இன்று தாயகம் திரும்புவர்

## பிரபாவின் பரிசீலனையின் பின்னர் அரசிடம் கையளிக்கப்படும்

(நமது நிருபர்)

**அயர்லாந்தில் இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு குழுவினரால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக இலங்கை அரசு விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்திருந்த மூன்றாவது திட்ட வரைபிற்கு மாற்று யோசனைகள் அடங்கிய வரைபு ஒன்றை அரசிடம் சமர்ப்பிப்பதற்காக விடுதலைப் புலிகளின் சட்டவல்லுநர்களும், சர்வதேச சட்டவல்லுநர்களும் அண்மையில் பரிஸில் கூடித் தயாரித்திருந்தனர்.

பரிஸ் திட்டவரைபு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தபின் அதற்கு இறுதி வடிவம் வழங்குவதற்காக கடந்த 6ம் திகதி முதல் 10ம் திகதி வரை தொடர்ந்து ஐந்து தினங்கள் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், சர்வதேச சட்டவல்லுநர்களும் அயர்லாந்தில் கூடி ஆராய்ந்தனர்.,

இடைக்கால நிர்வாக சபைக்கு அயர்லாந்தில் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டபின் புலிகளின் **அதிகாரத்துடன் கூடிய சு.ப.தமிழ்ச்செல்வன்** பிரதிநிதிகள் டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்கு சென்று அங்கு அரச பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின் இன்று தாயகம் திரும்புகின்றனர்.

இன்று தாயகம் திரும்பும் இவர்கள் அயர்லாந்தில் இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கவுள்ளனர்.

(10ம் பக்கம்- பார்க்க)



தமிழ்ச்செல்வனும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் நோர்வேயில் சந்தித்த போது

## தேர்தல் ஆணையாளரின் கோரிக்கை ஜனாதிபதியினால் நிராகரிப்பு

### அமைச்சரவை கண்டனம்

(கொழும்பு)

தனது உடல்நிலை கருதி தனக்குச் சேவையிலிருந்து ஓய்வு வழங்கப்பட வேண்டுமெனத் தேர்தல ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கேட்டுக் கொண்டதற்கு ஜனாதிபதி மறுப்புத தெரிவித்தமை தொடர்பாக அமைச்சரவை தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் ஓய்வு பெற்றுச் செல்வதை ஜனாதிபதி அனுமதிக்காதது அதிருப்தி அளிக்கிறது, இது ஜனநாயகத்தை மீறும் செயலாகும், இவ்வாறு கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் ஆணையாளரின் ஓய்வு தொடர்பான விவாதத்தினால் சுயாதீனத் தேர்தல் ஆணைக்குழுவின் நியமனமும் தாமதம் அடைகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை தான் ஓய்வு பெற்றுச் செல்வதை அனுமதிக்க வேண்டுமெனக்

(10ம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

மின்சாரம் பெற முற்பட்ட வேளை மின்தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் நிஷாந்தன் (வயது 18) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் உடனடியாக சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது அங்கு மல்லாகம் நீதிபதி திருமதி இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது

(த.71)

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் பரிதாப மரணம்

### நாயன்மார்கட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின் இணைப்பு வேலையில் ஈடுபட்டவர் மின்சாரம் தாக்கியதில் பரிதாபகரமாக உயிரிழந்தார் நல்லூர் நாயன்மார்க் கட்டு வீதியில் வசித்து வரும் பரராசசிங்கம் பார்த்தீபன் (வயது 30) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

ஒலி ஒளி உபகரணங்களை வாடகைக்கு கொடுக்கும் தொழிலில் ஈடுபடும் இவர் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் மின் இணைப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த சமயம் மின்சாரம் தாக்கியது உடனடியக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் வழியில் உயிரிழந்தார் (ந-7)

## சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதே எமது குறிக்கோள்

### செய்தியாளர்களிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதும், வடக்குக் கிழக்குப் பகுதியில் இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதுமே எமது குறிக்கோள். இவ்வாறு புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனை நேற்று முன்தினம் ஒஸ்லோவில் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்புத் தொடர்பாக, ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்;

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என நாங்கள் நம்புகின்றோம்.

இம்மாத இறுதிக்குள் இடைக்

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹிலாறி- மிலிந்த பிரிட்டனில் முக்கிய சந்திப்பு

(லண்டன்)

சர்வதேச அபிவிருத்திக்கான பிரிட்டிஸ் அமைச்சர் ஹிலாறி பென்னை பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பிரித்தானியாவில் தங்கிருக்கும் அமைச்சர் மிலிந்த நேற்று முன்தினம் அமைச்சர் ஹிலாறி பென்னை அங்கு சந்தித்து கரந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது இலங்கையின் சமாதான முயற்சிகள் பற்றி அமைச்சர் விளக்கிக் கூறினார்.

இதேவேளை இலங்கையின் சமாதான முயற்சிக்கு பிரிட்டன் தொடர்ந்தும் உதவும் என்று ஹிலாறி மிலிந்தவிடம் உறுதியளித்துள்ளார். (இ)


SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு
தீபாவளியை முன்னிட்டு
இன்று முதல்

காவேரி சில்க்ஸ்
வழங்கும்
மாபெரும் மலிவு விற்பனை
உங்கள் குடும்பத்தவர்களுக்கான முழு ஆடைத் தெரிவுகளுக்கும்
காவேரி சில்க்ஸ்
43 ,பெரிய கடை
யாழ்ப்பாணம்
T.P : 2333
(சி-6752)
SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு SALE SALE மலிவு மலிவு


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விவசாய முயற்சிகள் குறித்து புள்ளி விபரம் திரட்டல்

(இருபாலை)

வலி-கிழக்கு மற்றும் வலி-தெற்கு பிரதேசத்திற்குட்பட்ட விவசாயப பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய முயற்சிகள் தொடர்பான புள்ளி விபரங்களை உரும்பிராய் கமநல சேவைகள் நிலையம் திரடடி வருகின்றது.

மேற்படி பகுதியிலுள்ள விவசாயக் காணிகள், விவசாயத்தில் ஈடுபடும் குடும்பங்களின் தொகை, விவசாய உபகரணப் பொருட்கள், வதிவிட வேளாண்மை மற்றும விவசாயத்தை மேற்கொள்வதற்கு வேண்டிய நீர் நிலைகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அத்துடன், விவசாயம் சார் கைத்தொழில்கள், அவற்றுடன தொடர்புடைய நிறுவனங்கள், விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ள உவர் நிலங்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வசதிகள் உட்பட மற்றும் பல விபரங்களையும் மேற்படி கமநல சேவைகள் நிலையம் திரட்டி வருகின்றது. (உ-84)

# வர்த்தகத் திணைக்களத்துக்கு எதிராக மனுத்தாக்கல்

(கொழும்பு)

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தை ஏலத்தில் விடுவதெனற வர்த்தக அமைச்சின் தீர்மானத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இத் திணைக்களததில் பணிபுரியும் 160 ஊழியர்களே மேல முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி திணைக்களத்தை ஏலத்தில் விடுவதால் வேலை இழக்கும் ஊழியர்களுக்கு ஓய்வூதியமோ, இழப்பீடுகளோ வழங்கப்படமாட்டாது என்ற அமைச்சின் தீர்மானத்தை இரத்துச் செய்யவேண்டும் என்றே மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-60)

# அரவிந்தன் சுவீடன் பயணம்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டில் இடம்பெறவுள்ள இளம் அரசியல் தலைவர்களுக்கான மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் வடமராட்சி அமைப்பாளர் ச. அரவிந்தன் பங்கேற்கவுள்ளார்.



சுவீடன் தேசிய இளைஞர் அமைப்பு நடத்தும் இம்மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

ஜனநாயகத்தின் உள்ளடக்கம் என்னும் தொனிப்பொருளிலான இந்த மாநாட்டில் சர்வதேச நாடுகளின் இளம் அரசியல் தலைவர்கள் பலர் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையில் இருந்து ஐக்கிய தேசயக்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, சிஹல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பலர் பங்கேற்கின்ற போதும் வடக்கு கிழக்குத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இவர் ஒருவரே அங்கு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## 13 சிறுவர்களைப் புலிகள் ஒப்படைத்தனர்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையச்சென்ற 13 சிறுவர்கள் நேற்று அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு படுவான்கரை தேனகம் வீடுதியில் மட்டக்களப்பு அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் சிறுவர்களை அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

இந்நிகழ்வில் யுனிசெவ்வின் மட்டக்களப்புக்கான வதிவிடப்பிரதி நிதி அன்ரியா ஜேம்ஸ் கலந்து கொண்டார் இதேவேளை அம்பாறையில் விடு தலைப் புலிகளின் இயக்கத்தில் இணையச்சென்ற ஏழு சிறுவர்கள் இன்று அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (ந-5)

## தரம் 5 மாணவர்களுக்கு முன்னோடிப்பரீட்சை

(பொன்னாலை)

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் தரம் 5ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான முன்னோடிப் புலமைப்பரிசில் பரீட்சையும் இலவசக் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கானை மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நடைபெறும் இம் முன்னோடிப்பரிட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது. (த-49)

## மெய்கண்டதேவர் குருபூசை

(யாழ்ப்பாணம)

அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கம் நடத்தும் மெய்கண்டதேவர் குருபூசை நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலனசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மாணவருக்கிடையிலான சிவஞாபோத 12 சூத்திர மனன பண்ணிசைப் போட்டியும் அன்றைய தினம் நடைபெறவுள்ளதால் பங்குபற்ற விரும்புவோர் அன்று காலை 9.30 மணிக்கு தங்கள் பெயர்களை பதிவுசெய்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விண்ணப்பப்படிவம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பலகலைக் கழக சிறுவணிகமுகாமைத்துவ கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவத்தினை ரூபா 150 செலுத்தி யாழ். பிராந்திய நிலைய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது (தி)

## சட்டமாணிக் கற்கை அனுமதிப்பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ் பிராந்திய நிலையத்தில் சட்டமாணக் கற்கை நெறிக்கு விண்ணபித்தவர்களுக்கான அனுமதிப் பரீட்சை நாளை காலை 10 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது (தி)

## சிறுவர்களின் தரவுகள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு செயற்திட்டங்களுக்கு உதவியாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல சிறுவர் நலன் பேணும் நிறுவனங்களிடம் இருந்தும், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினால் தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் எனும் செயற்திட்டத்திற்கு அமைவாக யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் இத்தரவு சேகரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (உ)

## கல்நார் இழைப்படகு காரைநகரில் தயாரிப்பு

(காரைநகர்)

காரைநகர் தோப்புகாட்டில் உள்ள கலநார் இழைப்படகு தொழிறசாலையில் கல்நார் இழைப்படகு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக தடைப்பட்டிருந்த இவ் உற்பத்தி நிலையம் தற்போது இந்து காலாசார அமைச்சின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஏழரை அடி நீளமான இப்படகு உற்பத்திக்கு 93ஆயிரம் ரூபா செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-256)

# அமெரிக்க இராஜதந்திரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க இராஜதந்திரிகள் குழு ஒன்று நேற்று யாழ் குடாநாட்டுக்கு விஜயம் செய்தது.

யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து அறிந்து கொள்ளும் நோக்குடனேயே அக்குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்

இராஜதந்திரிகளான ஜேம்ஸ் உஸ்வர், ஜேம்ஸ்லன்றவிக்ரே ஆகியோரின் தலைமையில் வருகைதந்த அக்குழுவினர், யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் குடா நாட்டின் பலபகுதிகளுக்கும் நேரில் சென்று நிலைமையை அவதானித்தனர்.

இதேவேளை யாழ்.நூல் நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்ட அக்குழுவினர் அது இன்னமும் திறக்கப்படாமை குறித்தும் கேட்டறிந்து கொண்டனர் (இ.7.43)

# பனைஅபிவிருத்திச் சபை நடத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளிவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ''கற்பகதரு'' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியின் முடிவுகளை பனை அபிவிருத்திச் சபை வெளியிட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரம் 21ந் திகதி காலை 10 மணிக்கு யாழ. மத்திய கல்லூரியில் நடைபெறுமென பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ.சிவபாதம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பரிசு பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்: செல்வி சிந்துலேகா பாலசுப்பிரமணியம், தரம் 13, மகளிர் கல்லூரி சாவகச்சேரி.

இரண்டாம் இடம்: செல்வி செ. பௌசியா, தரம் 11, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி கரவெட்டி.

மூன்றாம் இடம்: செல்வி விக்னேஸ்வரி கிருஸ்ணபிள்ளை, தரம் 11, யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

நான்காம் இடம்: செல்வி தவராசா சர்மிளா, தரம் 13, கலைப்பிரிவு, வட. இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை.

ஐந்தாம் இடம்: செல்வி ந.ஜெனனி, யா/மகாஜனாக் கல்லூரி, செல்வி சர்மிளா குணசசிகரன், யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்: செல்வி ந.நிரோஜினி, தரம் 10, யா/மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பளை.

இரண்டாம் இடம்: செல்வன் நிரோன் நிரோஜன், தரம் 10, யா/புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்.

மூன்றாம் இடம்: செல்வி பவிதா பாலச்சந்திரன், தரம் 9, யா/மகாஜனாக் கல்லூரி.

நான்காம் இடம்: செல்வி ச.பானுஜா, சிறியபுஷ்ப மகளிர் மகாவித்தியாலயம், ஊர்காவற்றுறை.

ஐந்தாம் இடம்: செல்வி நிரோஷனா மகேந்திரலிங்கம், தரம் 9, யா/இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்.

# புலிகள் பாராளுமன்றம் வருவதற்கு அரசியல்கட்சிகள் உதவ வேண்டும்!

## அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கோரிக்கை

(நமது நிருபர்)

நாட்டிலுள்ள பிரதான அரசியற் கட்சிகள் தமது குறுகிய அரசியல் இலாபங்களை கைவிட்டு நிரந்தர சமாதானத்தை எட்டும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்கச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தகவற்தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வலியுறுத்திக் கூறிள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் நீரோட்டத்தில் இணையச் செய்வது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கடந்த காலங்களில் விடுதலைப புலிகள் தமது போராட்டங்களை முன்னெடுத்துச் செலவதற்காக சர்வதேச சமூகங்களின் ஆதரவைத் தேடிச் சென்றனர். ஆனால் இன்று அவர்கள் சமாதானத்தில் விருப்பங்கொண்டு சமதானத்தை நிலைநாட்டுவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவிகளை நாடி வருகினறனர்.

விடுதலைப் புலிகளின் இந்த மாற்றம் எதிர்காலத்தில் அவர்கள் பாராளுமன்றம் செல்வதற்கான ஒரு படிமுறையாக அமைந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியினர் இரண்டு தடவைகள் ஆயுதம ஏந்தி பாரிய அளவிலான உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியிருந்தனர். எனினும் ஏனைய அரசியற் கட்சிகள் அவர்களை பாராளுமன்ற நடைமுறைக்கு ஈர்க்கும் வகையில் வாய்ப்பு வழங்கியதால் இன்று அவர்கள் பாராளுமன்றம வந்துள்ளனர் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (வ)

# சேவையிலீடுபடும் ஓட்டோக்கள் அனைத்தும் பதிவு செய்யப்படவேண்டும்

## முச்சக்கர மோட்டார் ஊர்திச் சங்கம் அறிவுறுத்து

யாழ். குடாநாட்டின் சகல பகுதியிலும் சேவையிலீடுபடும சகல ஓட்டோக்களும் எமது சங்கத்தில் பதிவு செய்து சங்கத்தால் வழங்கப்படும் அங்கத்துவ அட்டையைப் பெற்று சேவையிலீடுபட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாது சேவையிலீடுபடுவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகக் கருதப்படுவர். இவ்வாறு வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்க தலைமைக் காரியாலயம் நேற்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மோட்டார் ஊர்திச் சேவைச சங்கத்தில் பதிவு செய்து தரிப்பிடக் குறியீடுகள் பொறித்து சங்கத்தில அங்கத்துவ அட்டையைப் பெற்றுக்கொண்டவர்களின் ஓட்டோக்களை மட்டும் வாடகைக்கு அமர்த்திச் செல்வதே பயணிகளுக்கு பாதுகாப்பானதாகும.

ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள், பயணிகள், பொதுமக்கள் ஆகியோரின் நலன் பேணும் வகையில் பதிவுகளை மேற்கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும்,தவறும பட்சத்தில் சம்பந்தப்பட்வர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## முன் அறிவித்தலின்றி மின் வெட்டு

(சரசாலை)

முன்னறிவித்தல் எதுவுமின்றி தென்மராட்சிப்பகுதியில் தினந்தோறும் அடிக்கடி மின் விநியோகம் துண்டிக்கப்படுவதால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளதாக தெரியவருகிறது

அதேவேளை தென்மராட்சிப் பகுதிக்கான 24 மணிநேர மின் விநியோகம் அண்மையிலேயே ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பி-28)

## மின்விநியோகம் தடை

(குப்பிளான்)

அனலைதீவுப் பகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த சில நாட்களாக தடைப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளுக்கான மின்சார விநியோகத்தை மேற்கொண்டு வந்த மின்பிறப்பாக்கி பழுதடைந் தமையாலே இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (உ-20)

# நூல் அறிமுகமும் ஒன்றுகூடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்ட தெல்லிப்பளை கலை இலக்கியக்கள அனுசரணையுடன் அநு.வை.நாகராஜன் எழுதிய பட்டரின அபிராமி மான்மியம், சிறுவர் சிந்தனைக் கதைகள் ஒரு காலத்துச் சிறுகதைகள் ஆகிய நூல்களின் அறிமுகமுகம் ஒன்று கூடலும் எதிர்வரும் 25ம் திகதி சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு தாவடி இந்து தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற வுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் கருத்துரைகளை முன்னாள் அதிபர் சு.செல்லத்தரை தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் கலாநிதி க.குணராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பாராட்டுரைகளை புத்தொளி சிவபாதம் இ.சரவணபவான் இந்து சமய விவகார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம் மூத்த எழுத்தாளர் வரதர் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் யாழ். இந்துக்கலலூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆகியோரும் வழங்கவுள்ளனர் (உ)

## வீதிதிருத்த நிதிஒதுக்கீடு

(நயினாதீவு)

2003ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டநிதியில் இருந்து யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவு பிரதான வீதி புணரமைப்புக்கு 7 இலட்ச ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் (பி)

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலையில் ஜி.ரி.சற்.நிறுவனத்தின் உதவியுடன் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது. (உ-39)

## சென். பற்றிக்ஸ் வென்றது

(கொய்யாத்தோட்டம்)

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையே நேற்று நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன.

16,18,20 வயதிற்குட்பட்ட அணிகள் முறையே 2:0,3:1, 10:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றன. (ந-31)

## சிறு விளம்பரம்

### தேவை

வாகனத்தில் சென்று வியாபாரம் செய்யக்கூடிய விற்பனைப் பிரதிநிதி தேவை (ஆண்கள்) தொடர்பு: ஆசீர் வணிக நிலையம், 202A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(C/6745)


## கந்த சஷ்டி விரத விழா

(தொல்புரம்)

அராலி கிழக்கு மலையாழன் காடு ஐயனார் ஆலயத்தில் கந்த சஷ்டி விரதத்தை ஒட்டி எதிர்வரும் 26ம் திகதிமுதல் 30 ஆம் திகதி வரையான 5 நாட்களும் விஷேட அபிடேக ஆராதனைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெறவுள்ளதுடன், கந்தபுராணப் படிப்பும் இடம்பெறவுள்ளது.

(உ-70)

# யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் ஊடகத்துறை அமைச்சருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஊடகவிலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு பல மாதங்கள் கடந்தும் விசாரணையில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்பட்டு வருகிறார்கள். இதற்கு ஊடகத்துறை அமைச்சின் அசமந்தப் போக்கே காரணமாகும்.

யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் யாழ். அரச அதிபரூடாக ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும், ஊடகத்துறை அமைச்சருக்கு பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

★ நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணையில் இழுத்தடிப்பு ஏன்? பிரதமரால் ஏன் விசேட விசாரணைக்குழு அமைத்து விசாரணை நடத்த முடியாமல் போனது.

★ மானிப்பாய், நெல்லியடி, மட்டக்களப்புப் பகுதிகளில் தாக்கப்பட்ட செய்தியாளர்கள் மீதான விசாரணை முடிவை ஏன் இதுவரை வெளியிட முடியவில்லை. மேலும் தாக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடோ? அல்லது நதி ஏன் வழங்கப்படவில்லை.

★ அரியாலை மாம்பழம் சந்தியில் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதற்கு ஊடகத்துறை அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்தது?

எங்களால் கோரப்பட்ட மேற்படி வினாக்களுக்கு ஊடகத்துறை அமைச்சு நேர்மையுடன் பதிலளித்து உரிய நடவடிக்கையில் ஈடுபடுவதே பொருத்தமானது எனச் சுட்டிக்காட்டுகிறோம் என்றுள்ளது. (உ-7)

# அரசாங்க சேவை கட்டமைப்பு மறுசீரமைப்புச் செய்யப்படும்

## அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசசேவை நிர்வாகக் கட்டமைப்பில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், அரச சேவை நிர்வாகம் தொடர்பான அனுபவமுள்ள அதிகாரிகள் கொண்ட குழுவொன்று இதுகுறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்படவுள்ளது.

இக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமையவே இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(தி-61)


## சிறுவர் பற்றி சிந்திப்போம்

நான் ஒரு பாடசாலை மாணவி. எனது நண்பி ஆண்டு 7 படிக்கின்றார். ஆண்டு ஐந்து புலமை பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் வறுமையினால் தனது கல்வியை தொடரமுடியாது மிகவும் கஷ்டப்படுகின்றார். நான் கடந்த சில மாதங்களாக உதவி செய்து வருகிறேன். தொடர்ந்தும் இவரின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும்படி மாவட்ட சிறுவர் பரிதுகாப்புக் குழுவினரை வேண்டிக் கொள்கின்றேன்

நன்றி

இது ஒரு நலன் விரும்பி மாணவியின் ஆதங்கம். உங்கள் பிரதேசத்திலும் பலர் கல்வியை தொடரமுடியாமலும், சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குட்பட்டும் வாழலாம். அப்படியாயின் எமக்கு அறிவியுங்கள்.

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு**

அறை இல. 30

யாழ். போதனா வைத்தியசாலை,

யாழ்ப்பாணம்.

விளம்பர அனுசரணை:-

சிறுவர் பாதுகாப்பு

இலங்கை

(C/6748)


## மரநடுகைத் திட்டம் ஆரம்பம்

(தொல்புரம்)

உலக உணவு தினமான கடந்த 15 ஆம் திகதி வலி. மேற்கு பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலர் மு.சிவராசா மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

(உ-70)


## முக்கிய அறிவித்தல்

**சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்**

**கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் - 2003**

நாளை 19.10.2003ந் திகதி இடம்பெறவிருந்த கிளைக் குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால், 09.11.2003ந் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என கூ.அ.உ.ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கமைய 09.11.2003ந் திகதி தெரிவு இடம்பெறும் எனவும் அறியத் தருகின்றோம்.

17.10.2003 (c/6749) - செயலாளர்.


### ஒலிம்பிக் போட்டியை ஒட்டி

# கிரேக்கத் தலைநகர் எதென்ஸில் பாரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள்

2004ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டி நிகழ்வுகளின் போது என்றுமில்லாதவாறு பாதுகாப்பு பணியினை பாரிய அளவில் மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாக ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

2004ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தில் உள்ள எதென்ஸ் நகரில் இடம்பெறவிருக்கின்றதும், இங்குதான் முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி 1896ஆம் ஆண்டு நடாத்தப்பட்டதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இம் முறை நடைபெறவுள்ள போட்டி நிகழ்வுகளுக்காக 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக கிரேக்க நாட்டின் கலாசாரத்துறை அமைச்சர் இலங்கெலஸ் வெனிசுலஸ் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகளுக்கான பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதற் கென 58 ஆயிரம் பொலிஸாருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதென்றும், விளையாட்டுப்போட்டி நிகழ்வொன்றிற்காக அதிகளவு பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ள முதலாவது நிகழ்வு இதுவென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-68)




# முதல் சுற்றில் ஏற்பட்ட தோல்வியை இலங்கை அணி ஈடுசெய்யுமா?

சிரியாவிற்கு எதிராக கடந்த புதன்கிழமை டமஸ்கஸ்சில் நடைபெற்ற ஆசிய கால்பந்தாட்டப் போட்டிக்கான தகுதிகாண் இரண்டாம் சுற்றுப் போட்டியின் முதலாவது ஆட்டத்தில் 5:0 என்ற கோல் கணக்கில் இலங்கை அணி படுதோல்வி அடைந்தது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது போட்டி இன்று டமஸ்கஸ்சில் நடைபெறவிருக்கின்றது.

இவ்வரண்டாம் சுற்று தகுதிகாண் போட்டிகளில் 'ஜி' குழுவில் இலங்கைக் கால்பந்தாட்ட அணி மொத்தமாக 6 போட்டிகளில் விளையாடவுள்ளது. எனினும். முதலாவது போட்டியில் இலங்கை அணி அடைந்துள்ள படுதோல்வியை அடுத்த போட்டிகளில் ஈடுசெய்யுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

இதேவேளை, ஜித்தாவில் நடைபெற்ற 'சி' குழுவிற்கான 2ஆம் சுற்று தகுதிகாண் போட்டியில் சவூதி அரேபியா 4:0 என்ற கோல் கணக்கில் பூட்டான் அணியை வெற்றிகொண்டுள்ளது.(உ-68)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

வடமராட்சி வலய கல்விப் பணிமனையில் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22ம் திகதி பி.ப.3.00 மணிக்கு நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் இறுதிப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையும், 18 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (உ-18)

# பாக். அணியின் அபார ஆட்டத்தின் முன் தோல்வியைத் தழுவிய உலக கிரி.அணி

பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்கும், உலக கிரிக்கெற் அணிக்கும் இடையிலான ஒருநாள் கிரிக்கெற் போட்டி கடந்த புதன் கிழமை பாகிஸ்தானிலுள்ள கடாபி விளையாட்டரங்கில் நடைபெற்றது.சிந்தகி சிறுவர் நிதியத்திற்கு நிதி திரட்டும் முகமாகவே 40 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலகக் கிரிக்கெற் அணிக்கு இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரியா தலைமை தாங்கியதோடு பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்கு முன்னாள் தலைவர் வசீம்அக்ரம் தலைமை தாங்கினார் இப்போட்டியில் பாகிஸ்தான் கிரிக்கெற் அணி 43 ஓட்டங்களால் உலக கிரிக்கெற் அணியை வெற்றி கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுபெடுத்தாடுவதாகத் தீர்மானித்தது. இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர் முடிவில் 8 விக்கெற் இழப்புக்கு 260 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி பெற்றுக்கொண்டது. பாகிஸ்தான் அணிசார்பாக துடுப்பாட்டத்தில் நிஸ்பாவு உல் ஹக் 77 ஓட்டங்களையும், யசீர் ஹமீட் 52 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.


பதிலுக்குத் துடுபெடுத்தாடிய உலகக் கிரிக்கெற் அணியினால் நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர் முடிவில் 7விக்கெற்றுக்களை இழந்து 217 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

உலகக் கிரிக்கெற் அணிசார்பாக துடுப்பாட்டத்தில் இந்திய வீரரான ரொபின்சிக் 58 ஓட்டங்களையும், கென்ய வீரரான ஸ்ரீப் ரிக்கலோ 43 ஓட்டங்களையும், இலங்கை வீரரான ரமேஷ் களுவிதாரண 36 ஓட்டங்களையும், அவுஸ்திரேலிய வீரரான டீன் ஜோன்ஸ் 27 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

எனினும், பாகிஸ்தான் அணியிடம் உலக கிரிக்கெற் அணி 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத்தழுவிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் பாகிஸ்தான் அணியின் நிஸ்பாவு உல் ஹக் தெரிவுசெய்யப்பட்டதோடு சிறந்த பந்தவீச்சாளராக பாகிஸ்தான் அணியின் முஷ்ராக் அகமட்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

(உ-68)



நியூஸிலாந்து அணியை முன்னணிக்குக் கொண்டுவந்த மார்க் ரிச்சர்ட்சனும் லூவின்சன்ட்டும் களத்தில் தம் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

# பாதுகாப்புச் சபையில் யு.எஸ் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

## ரஷ்யா,பிரான்ஸ், சீனாவுடன் சிரியாவும் ஆதரவு

(நியுயோர்க்)

ஈராக்கிற்கு மேலும் அதிகமான துருப்புக்களையும், நிதியையும் பெற்றுக்கொள்ளும் நோக்காகக் கொண்ட அமெரிக்காவின் புதிய தீர்மானம் ஒன்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் ஏகமனதாக அங்கீகரிக்கப் பட்டது.


ஈராக்கில் தனது ஆக்கிரமிப் பிற்கு ஆதரவு தேடும் அமெரிக்க ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றியாக இது கருதப்படுகிறது.

ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிர்ப புத் தெரிவித்த பிரான்ஸ்,ரஷ்யா,ஜேர மனி, சீனா ஆகிய நாடுகளும் இத்தீர்மானத்துக்கு ஆதரவு தெரி வித்துள்ளன.

பாதுகாப்பு சபையிலுள்ள ஒரே யொரு அரபு நாடான சிரியாவும் இத்தீர்மானத்துக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளது.

இத்தீர்மானத்துக்கும் பாதுகாப்புச சபையிலுள்ள 15 நாடுகளினதும் வாக்குகளும் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கு உதவுவதற்கு சிறப் பான தருணம் இதுவே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பி-2)



தைவான் நாட்டில் ராணுவ வீரர்களின் 4 நாள் சாகச நிகழ்ச்சி களுக்கான ஒத்திகை நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக கடலுக்கடியில் புதைக்கப்பட்ட வெடிகுண்டுகள் ஒரே சீராக வெடித்த பிரம்மாண்டமான காட்சி.

# பலம் வாய்ந்த நாடுகளின் நடவடிக்கை உலகை குழப்பத்தில் ஆழ்த்துகிறது

## பாப்பரசர் வெளியிட்டுள்ள நூலில் தெரிவிப்பு

(வத்திக்கான்)

பலம்வாய்ந்த நாடுகள் பலம் குறைந்த நாடுகள் மீது நடத்தி வருகின்ற ஆக்கிரமிப்பு முழு உலகையும் குழப்பத்தில் ஆழ்த் தியிருப்பதாக பரிசுத்தபாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

உலகின் பல பாகங்களில் மக் கள் பட்டினியால் வாடும் அதே நேரம் பலர் சொகுசு வாழக்கை வாழ்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நசுக்கப்பட்ட மக்களையும் துன் புறுத்தப்படும் மக்களையும் காப் பாற்ற கத்தோலிக்கத் திருச்சபை முன வரவேண்டும் எனவும் பரிசுத்த பாப் பரசர் வேண்டுகோள விடுத்துள் ளார்.பரிசுத்த பாப்பரசர் பதவி யேற்று 25 ஆண்டுகள் நிறைவை யொட்டி வெளியிட்ட 192 பக்கங் களைக் கொண்ட நூலிலேயே இந்த விடயங்களைப் பரிசுத்த பாப் பரசர் தெரிவித்துள்ளார்.

பரிசுத்த பாப்பரசரின் வெள்ளி விழாவை முன்னிட்டு ஐக்கிய நாடு கள் செயலாளர்நாயகம்,. ரஷ்யா, இத்தாலி, ஜேர்மனி ஆகிய நாடு களின் தலைவர்கள் உட்பட பல் வேறு நாடுகளின் முன்னாள் தலை வர்களும் பரிசுத்த பாப்பரசரை வாழ்த்தியிருக்கின்றனர்.

வன்முறைகளும் யுத்தங்களும் சூழ்ந்துள்ள உலகத்தில் பரிசுத்த பாப்பரசர் சமாதானத்தின் சின்னமாகத் திகழ்வதாக ஐக்கிய நாடுகள் செய லாளர் நாயகம் கோபி அன்னான் தனது வாழத்துச் செய்தியில் தெரிவித் துள்ளார்.

அத்துடன் பாப்பரசரின் போதனை கள் உலகம் முழுவதிலும் இருக் கின்ற மக்களுக்கு எடுத்துக்காட்டா கவும் படிப்பினையாகஅமைவதாகவும் கோபி அனான் கூறியுள்ளார்.(பி-2)





பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் உள்ள பீட் ஹானுன் எனும் இடததில் அமெரிக்கத் தூதரக வாகனத்தின் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 அமெரிக்கர்க்ள் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றொருவர் கவலைக்கிடமாக உள்ளார். தாக்குதலுக்குள்ளாகி சின்னாபின்னமாகியிருக்கும் வாகனம்.

# தாவுத் இப்ராஹிம் உலகின் விசேட பயங்கரவாதி

## அமெரிக்க அரசு அறிவிப்பு

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் கடவுச் சீட்டையும் கராச்சிநகர முகவரியையும் கொண்டு இயங்கிவரும் தலைம றைவுக் கும்பலின் தலைவன் தாவுத் இப்ராஹிம் உலகின் விசேட பயங் கரவாதி என அமெரிக்க நீதியமைச் சகம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பினை அடுத்து அமெரிக்காவில் உள்ள தாவுத் இப்ராஹிமின் சொத்துக்கள் அனைத் தும் முடக்கப்பட்டுள்ளன.

இந்திய அமெரிக்கப் புலனாய்வுத் துறை அமைப்புக்கள் மிக நெருக்க மாகச் செயல்பட்டே இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறி விக்கப்பட்டுள்ளது.

ஒஸாமா பின்லேடனும் அவ ருடைய அல்கெயடா பயங்கரவாத தொடர் அமைப்புடனும் தாவுத் இப் ராஹிமிற்கு நெருங்கிய தொடர்பு இருப்பதை இந்திய அமெரிக்கப் புலனாய்வுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

1993 மும்பையில் இடம்பெற்ற தொடர்குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து இந்தியா தாவுத் இப்ராஹி ம்மைத் தேடிவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

# 20 தீவிரவாதிகளையும் பாக்.ஒப்படைக்க வேண்டும்

## அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா கோரியுள்ள 20 பாகிஸ் தான் தீவிரவாதிகளையும் அந்நாடு உடனடியாக தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென இந்திய துணைப்பிர தமர் எல்.கே.அத்வானி தெரிவித் துள்ளார்.

தீவிரவாதிகளை பாகிஸ்தான் ஒப படைத்தால் மாத்திரமே இருநாடு களுக்குமிடையில் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாகுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் ஆரம்பமான ''இன்ரபோல்'' மாநாட் டில் கலந்துகொண்டு உரையாற்றி றும் போதே இந்தியத் துணைப் பிரதமர் இதனைத் தெரிவித்துள் ளார்.

பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களை பிரதமர் வாஜ்பாய் மேற் கொண்டு வருவதாகவும் ஆயினும் பாகிஸ்தானிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவில் நாசகார செயல் களில் ஈடுபட்ட 20 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தஞ்சமடைந்துள்ள தாகவும் அவர்களின் பட்டியலை 2001 ஆம் ஆண்டு இந்தியா பாகிஸ்தானிடம் சமர்பித்ததாகவும் துணைப்பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்களை ஒப்படைக்குமாறு பாகிஸ்தானிடம் பல முறை கேட்ட போதும் அதற்கு உரிய பதிலைப் பாகிஸ்தான் தெரிவிக்கவில்லையென வும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (பி-2)

## ஒட்டிப் பிறந்த குழந்தைகள் பிரித்தெடுக்கப்பட்டனர்

(ஹனோய்)

மார்பு,வயிறு ஒட்டிப்பிறந்த வியட் நாமைச் சேர்ந்த 10 மாத பெண் குழந்தைகள் அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்தெடுக்கப்பட்டனர்.

வியட்னாமில் ஹனோய் நகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனை யில் 9 மணிநேரம் நடந்த அறுவைச சிகிச்சையை 30 டாக்டர்கள் அடங்கிய குழு மேற்கொண்டது.

அறுவைச் சிகிச்சை வெற்றி கரமாக நடந்தது என்று மருத்துவ மனையின் இயக்குநர் தெரிவித்து ள்ளார். (பி)

# எதிரியின் தலையை வெட்டி தந்தைக்குப் படையல் போட்டனர்

## தமிழ்நாட்டில் ஒரு சம்பவம்

(தருமபுரி)

தருமபுரி மாவட்டம் தோப்பூர் அருகே ஒரு விவசாயின் தலை வெட்டப்பட்டு சமாதியில் படையல் வைக்கப்பட்டுள்ளது.

தந்தையின் மரணத்துக்கு பழி வாங்கிய 5 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

தோப்பூர் அருகேயுள்ள பாளை யம் புதூரைச் சேர்ந்த பாலகிருஸ் ணன் என்பவர் கடந்த 5ஆண்டு களுக்கு முன் ஒரு கும்பலால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக வண்டிக்காரன் கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமி(45) குடும்பத்துக்கும், பாலகிருஸ்ணன் குடும்பத்துக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது. பாலகிருஸ்ணன் கொலை வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

தந்தையின் மரணத்துக்கு பழி வாங்க அவரது மகன்கள் திட்டமிட்டனர்.

ராமசாமியை பேச்சுவார்த்தை நடத்தலாம் எனக்கூறி பாளையம் புதூர் சுடுகாட்டுக்கு அழைத்துச் சென்றுஅங்கு 5பேரும் சேர்ந்து அவரது தலையை வெட்டி தந்தையின் சமாதிக்கு படையல் வைத்துள்ளனர். பின்னர் அங்கி ருந்து அவர்கள் தப்பிவிட்டனர்.

இது குறித்து தோப்பூர் பொலி ஸார் வழக்குப் பதிந்து தலைமறை வாகிவிட்ட 5 பேரையும் தேடிவரு கின்றனர். இச்சம்பவம் தோப்பூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (பி)

# வி.எச்.பி.தொண்டர்கள் 25 ஆயிரம் பேர் கைது


(புதுடில்லி)

அயோத்தியில் விஸ்வஹிந்துப் பரிசத் நேற்று நடத்திய பேரணியை ஒட்டி உத்திரப் பிரதேச காவல் துறையினர் அந்த அமைப்பைச் சேர்ந்த சுமார் 25ஆயிரம் பேரைக் கைது செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே லக்னோவில் செய் தியாளர்களிடம் பேசிய உத்திரப் பிரதேச முதலமைச்சர் மொலாயன சிங்யாதவ் சர்ச்சைக்குரிய இடத்தில் அமைந்துள்ள ராமர் கோவிலைத் தரிசிக்க சுமார் 8 ஆயிரம் பக்தர் கள் அனுமதிக்கப்படுவார்கள் என் றார்.

வி.எச்.பியினர் சர்ச்சைக்குரிய இடத்தில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் தங்களது பேரணியை நடத்தலாம் என்றும் அவர் தெரி வித்தார்.

எனினும் விஸ்வஹிந்துப் பரிசத் இந்த யோசனையை நிராகரித் துள்ளது. வி.எச்.பியின் தலைவர் அசோக்சிங்கல் அயோத்தியில் வீட்டுக காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.





வஸ்வஹிந்துப் பரிசத்தின் பேரணி யை ஒட்டி அயோத்தியில் பதற்றமான நிலைமை காணப்படுவதாக ஏஜென சிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (பி-9)

# முஸ்லிம் நாடுகள் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## இஸ்லாமிய மாநாட்டில் முஷாரப் கோரிக்கை

(கோலாலம்பூர்)

காஷ்மீர் விவகாரத்திற்கு தீர்வு காணும் பொருட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கு மாறு இந்தியாவிற்கு முஸ்லிம் தலை வர்கள் அழுத்தங் கொடுக்க வேண்டுமென பாகிஸ்தான் ஜனாதி பதி பர்வேஷ் முஷாரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

மலேஷியாவின் புத்திரஜாயா நகரில் நடைபெறுகின்ற இஸ்லா மிய சம்மேளன அமைப்பு நாடுகள் கலந்துகொள்ளும் இரண்டுநாள் உச்சி மாநாட்டின் ஆரம்ப தின வைபவத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத தெரிவித்துள்ளார்.

இந்தியா யுத்தம் புரிவதையே நோக்காக கொண்டிருப்பதாகவும் முஷாரப் குற்றம் சாட்டியுள்ளார். காஷ் மீர் விவகாரம் முஸ்லிம்கள் அனை வரினாலும் கவனத்தில் கொள்ளப் படவேண்டிய விடயம் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புத்திரஜாயாவில் நடைபெறும் இந்த மாநாட்டின் மூலம் இந்தியா தனது தீர்மானங்களை மீள்பரிசீலனை செய்யத் தூண்டவேண்டுமெனவும் அவர் முஸ்லிம் தலைவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். (பி-2)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

# காரைநகர் சாலையில் பல்வேறு குறைபாடுகள்

(காரைநகர்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை டிப்போவில பல வசதியீனங்கள் நிலவுகின்றதால அவற்றை நிவிர்த்தி செய்து ஊழியர்கள் சௌகரியமாகவும் திறமையாகவும் சேவையாற்ற உதவி செய்யுமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். பொது முகாமையாளர் மணிவாசகத்திடம் காரைநகர் சாலை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் காரைநகர் சாலைடிப போவிற்கு வருகைதந்த சமயமே இக கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

மேலும் அவர்கள் தெரிவித்ததாவது,


டிப்போ ஊழியர்களிற்குக் கதிரை வசதிகள் குறைவாக உள்ளன. இரவு நேரக்கடமைக்காகத் தங்கும் சாரதி மறறும் நடத்துநர்களிற்கு தங்குமிட வசதிகள் குறைவாகவே உள்ளன.

அத்துடன், அலுவலகத்தில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி செயலிழந்து காணப்படுகிறது. இதனால் அவசர தேவைகளிற்குக்கூடத் தொடர்புபட முடியாத நிலமைகள் காணப்படுகின்றன.

மேலும் பல பஸ்வண்டிகள் தேவைபடுகின்றதுடன், காரைநகர் சாலை வதிகள் படுமோசமாக இருப்பதால் உரிய முறையில் திறமையான சேவையை வழங்கமுடியாதுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்குப் பதில் அளித்த பொது முகாமையாளர் இககுறைபாடுகள் நிவிர்த்தி செய்வதற்கு உரியநட வடிக்கைகள் மேற்கொள்வதோடு உரிய அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்ளவுள்ளதாகவும்தெரிவித்துள்ளார். (உ-246)

யுத்தம் இல்லாவிடினும் தமிழன் சாகவேணும்...!




## "வித்தகம்" வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் "வித்தகம்" இதழ்-2நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.00மணிக்கு உயர் தொழில்நுட்ப ஒன்று கூடல் மண்டபத்தில் மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.வி.ஜெயதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருநதினராக யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், சிறப்பு விருந்தினர்களாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளர் எஸ்.கமலநாதன், உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளாரி.இராஜரட்ணம், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும் கலந்து கௌள்ளவுள்ளனர். (உ-7)

# பேச்சை உடன் ஆரம்பிக்காவிட்டால் அரிதான சமாதான வாய்ப்பு இழக்கப்பட்டுவிடும்

## டென்மார்க் வெளியுறவு அதிகாரிகள் கருத்து

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தை களை உடனடியாகத் தொடங் காவிடடால் அரிதாகக்கிடைத்திருக்கின்ற இந்தச் சமாதான வாய்ப்பு இழக்கப்பட்டுவிடலாம்.

இவ்வாறு டென்மார்க்கின் வெளியுறவு அதிகாரிகள் அங்கு சென்ற விடுதலைப்புலிகளிடம் கூறியிருப்பதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சை ஆதாரங்காட்டி இலங்கை வெளியுறவு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகசபைத்திட்டம் தொடர்பாக டென்மார்க்கின் டப்பிளின் நகரில் மாற்று யோசனைகளைத் தயாரித்த விடுதலைப்புலிபளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், கடந்த செவ்வாயன்று டென்மார்க்கின் வெளியுறவுப் பிரதிநிதிகளைச் சந்தித்து நடத்திய நீண்டநேரப் பேச்சின் போதே மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டது.

இதேவேளை, இதே கருத்தையே விடுதலைப்புலிகள் குழுவும் வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹன்சன்,

கடந்த மார்ச் மாதம் டென்மார்க்கின் பாராளுமன்றம் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கென 156 மில்லியன் குரோனர்களை ஒதுக்கி இருந்தது என்பதை ஞாபகமூட்டினார். (உ-6)

# ஐரோப்பிய பிரதிநிதிகள் குழு இன்று மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

அங்கு செல்லும் இக் குழுவினர் தற்போதைய சமதானச் சூழ்நிலையில் மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், இராணுவ உயா அதிகாரிகள், கண்காணிப்புக்குழு, தமிழ்க்கட்சிகள், மாவட்ட முஸலிம் பிரதிநதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவுள்ளனர். (தி-61)

# காணாமல் போனவர்கள் குறித்த விசாரணைகள் அனைத்தும் பு,ர்த்தி

## இதுபற்றி உஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளை நடாத்தவென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரப் பத்திரத்திற்கு அமைவாகக் காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைகளையும் நுண்ஆய்வுகளையும் செய்து முடித்துள்ளது.

மேற்படி விசாரணைகள் நுண் ஆய்வுகள்தொடர்பான அறிக்கை விரைவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கு முன்னதாக, எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.2.30மணிக்கு கொழும்பு-6 இல:93/10, துட்டுகெமுனு வீதியில் அமைந்துள்ள மார்க் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து அந்த அறிக்கையின் சாராம்சம், ஊடகத் துறையினர், மனித அமைப்புக்களின் பிரதிநிதிகள் மனிதஉரிமை செயற்பாட்டாளர்கள் மத்தியில் முன்வைக்கப்படவுள்ளது. (உ)

# தேசிய மரநடுகைத் திட்டத்திற்கு கிராம அலுவலர் பங்களிப்பு அவசியம்

## வலி. மேற்கு உதவிப்பிரதேச செயலர் தெரிவிப்பு

(தொல்புரம்)

கடநத காலங்களில் இடம்பெற்ற யுத்தஅனர்த்தங்களால பயன்மிக்க மரங்கள் பல அழிவடைந்துள்ளதால் மீண்டும் மரங்களை உருவாக்குவதற்கு முனைப்புடன் செயற்பட்டு வரும் தேசிய மரநடுகை இயக்கத்திற்கு கிராம உத்தியோகத்தர்களின் பங்களிப்பு மிக அவசியமாகும்.

உலக உணவு தினமான கடந்த 15ஆம் திகதி வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கிராம உத்தியோகத்தர் மத்தியில் உரையாற்றும் போது வலி. மேற்கு உதவிப் பிரதேச செயலர் க.தர்மராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கூறுகையில், போரினால் அழிக்கப்பட்டுள்ள மரங்களினை மீண்டும் உருவாக்குவதற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மரநடுகைத் திட்டத்திற்கு முக்கிய இடமளிக்க வேண்டும்.

இதனடிப்படையில் வலி.மேற்கில உள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர்களும் குறைந்தது 5 மரங்களையாவது நட்டு நாட்டின் எதிர்காலத்தை வளமாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (உ-70)

# வடக்கு—கிழக்குப் பிரிப்பு யுத்தத்திற்கு வழிகோலும்

## யாழ்.முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கை நிரந்தரமாக ஒரே மாகாணமாக இணைக்கப்படுவதையும், இணைந்த மாகாணத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதையும் யாழ்.மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு வலியுறுத்துகின்றது.

இவ்வாறு மேற்படி அமைப்பின் சார்பில் அதன் செயலாளர் எம்.எம். சபூர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வட-கிழக்கு மாகாணத்தை இரு மாகாணங்களாகப் பிரிக்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்றும் அண்மைக் காலங்களில் இனவாத அரசியல் வாதிகள் கோஷமிடுவதைக் காண்கின்றோம்.

இக் கோஷமானது நாட்டில் மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழி அமைத்துவிடுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் இன உறவில் விரிசலை ஏற்படுத்துவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை படு பாதாளத்திற்குத் தள்ளிவிடும்.

இப் பிரிப்பை சகல இன மக்களும் கடுமையாக எதிர்க்க வேண்டும் என்பதுடன் இனங்களிற்கிடையிலான பிளவில் குளிர்காயும் இனவாத அரசியல் வாதிகளின் தந்திர நடவடிக்கைக்குத் துணை போகக் கூடாது. இதை சகல இன மக்களும் நாட்டின நலன்கருதி சிந்தித்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

இணைந்த மாகாணத்தின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாகக் கலந்து கொள்வதை அரசும், விடுதலைப்புலிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களின் உரிமைகள், அபிலாசைகள், எண்ணங்கள் என்பன கவனத்தில் எடுக்கப்பட்டு இணைந்த மாகாணத்தில் முஸ்லிம்கள் தனித்துவம் பேணக்கூடியவாறும் சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடியவாறும் இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பில் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# குடத்தனை வடக்கு மக்களுக்கான நிவாரணம் இடைநிறுத்தம்

## அரச அதிபரைச் சந்தித்து முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து குடத்தனை வடக்கில் வசித்துவரும் 85மீனவக் குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் கடந்த 7 மாதங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பாதிப்புற்றுள்ள குடும்பங்கள் நேற்று ஒன்றுதிரண்டு யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதனைச சந்தித்துத் தமது நிலைமை தொடர்பாக முறையிட்டனர்.

அவர்கள் அங்கு கூறியதாவது, 1996ஆம் ஆண்டு முதல் ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான மீனவர் நிவாரணத்தை நாம் பெற்று வருகின்றோம்.

இடம்பெயர்ந்து, அன்றாட வாழ்வைக்கொண்டு நடத்தவே கஷ்டப்படும் எமக்கு இந்த நிவாரணம் ஓரளவு ஆறுதல் அளிப்பதாக இருந்து வந்தது.

இந்த நிலையில், கடந்த மாதங்களாக எமக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் நாம் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளோம்.

எமது தொழிலான மீன்பிடித் தொழிலைச் செய்வதிலும் நாம் இடையூறுகளுக்கு மத்தியிலேயே ஈடுபடுகின்றோம்.

எமது சொந்த இடத்தில் நாம் குடியிருந்தால் இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படாது என்று குறிப்பிட்டனர்.

இவர்களது நிலைமைகளை நேரில் அவதானித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார். (உ-7)

# செய்தித் துளிகள்

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி இயங்கவில்லை

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சங்கானை ஆயுர்வேத வைத்தியசாலை இயங்காததால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

மீண்டும் இவ் ஆயுர்வேத வைத்தியசாலையை இயக்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-34)

## பாலர் கல்வி இதழ்

(மண்கும்பான்)

மண்கும்பான் பாலர் பாடசாலை கடந்த 13வருடங்களாக இயங்காமையால் இப்பகுதிச் சிறார்கள் பாலர் கல்வியை இழக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர்கள் பாடசாலைகளில் சேர்ந்து படிப்பதில் பல்வேறு சிக்கல்கள் எதிர்கொள்ளப்படுவதுடன் இவர்களுக்குப் போதிப்பதிலும் ஆசிரியர்கள் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

இதேவேளை, மண்கும்பான் பாலர்பாடசாலை கடந்தகாலப் போரனர்த்தங்களினால் சேதமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-56)

## சப்பாத்துகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிறுவனம், யாழ்.மத்திய கல்லூரியின் ஆரம்பப்பிரிவு மாணவர்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ்வாழும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கடந்த புதனன்று ஒரு தொகை சப்பாத்துக்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (உ-18)

## 3வருடங்களின்பின் காலபோக நெற் செய்கை

(சரசாலை)

அண்மையில் பெய்த மழையினை அடுத்து தென்மராட்சியில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்குளி, விளைவேலி, கிராம்பு வில் போன்ற பகுதிகளில் நெல் விதைப்பு நிறைவடையும் நிலையில் உள்ளது.

3 வருடங்களின் பின் இம்முறை மட்டுவில் மாணவளைப் பகுதியில் விவசாயச் செய்கை நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-28)

## குப்பிளானுக்கு மின்சாரம்

(குப்பிளான்)

குப்பிளான் பிரதேசத்தில் இதுவரையில் மின்சாரம் வழங்கப்படாதுள்ள பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இலங்கை மின்சார சபை ஈடுபட்டு வருகின்றது. (உ-20)

## மலசலகூடங்களை அமைக்கத் திட்டம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை மற்றும் முள்ளிக்கிராமம் ஆகியவற்றில் வசித்துவரும் வறுமைக் கோட்டின் கீழ்ப்பட் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு மூவிமெண்டோ நிறுவனம் 22 மலசலகூடங்களை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

இதற்கமைவாக மேற்படிக் கிராமங்களிலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் குடும்பங்களைத் தெரிவுசெய்யும் பணிகளில் கிராம அலுவலர்களும் அப்பகுதிப் பொதுச் சுகாதார அதிகாரியும் ஈடுபட்டு வருகின்றனர். (உ-252)

## பொதுக் கூட்டம்

(வடலியடைப்பு)

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(உ-21)

## பாதீனியம்பரவுகிறது

(மருதனார்மடம்)

மருதனார் மடம் சந்திப்பகுதியை அண்டிய வீதி ஓரங்களிலும் தோட்ட நிலங்களிலும் பாதீனியக் களை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதுவரையில் அவற்றை அழிப்பதற்கு உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (உ-33)

## கொடிவாரம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து கடந்த 15ஆம் திகதி முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை கொடிவாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இத்தினத்தில் இடம்பெயர்ந்த மக்களின் சுகாதாரம், முதலுதவி, கல்வி வசதி, வீதிப் போக்குவரத்துத் தேவைகளுக்கு நிதி சேகரிக்கப்படவுள்ளது. (த-34)

## விலங்கு வேளாண்மை ஊக்குவிப்பு

(கந்தர்மடம்)

யு.என்.எச்.சி.ஆர்.இன் உதவியுடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 30பேருக்கு விலங்கு வேளாண்மை, விவசாய ஊக்குவிப்புக்கென உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணியில் தற்போது நல்லூர்ப் பிரதேசசபை ஈடுபட்டுவருகின்றது. (உ-112)

## வட்டிவீதம்குறைப்பு

(கொழும்பு)

இலங்கை மத்தியவங்கி தனது வட்டிவீதங்களைக் குறைத்துள்ளது. மீள் கொள்வனவுக்கான வட்டி வீதத்தை 0.5வீதத்தினாலும் மீள் விற்பனைக்கான வட்டி வீதத்தை ஒரு வீதத்தினாலும் குறைத்துள்ளது.

இதன் பிரகாரம் 7.5வீதமாக இருந்த மீள் கொள்வனவுக்கான வட்டியை 7வீதமாகவும், 9.5வீதமாக இருந்த மீள் விற்பனைக்கான வட்டியை 8.5 வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (வ)

## வீதியால் செல்வோரை விரட்டும் நாய்கள்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை, மூளாய், மாவடி வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

இவ் வீதிகள் வழியாக மாலை நேரங்களில் போக்குவரத்தில் ஈடுபடுபவர்களை நாய்கள் சேர்ந்து விரட்டி வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-49)

## அடிக்கடி மின்தடை

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் கடந்த சில நாட்களாகப் பகல் இரவு வேளைகளில் மின்தடை ஏற்படுவதாகப் பாவனையாளர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாலை வேளைகளிலும் இரவு வேளைகளிலும் ஏற்படும் இத் தடையினால் பாடசாலை மாணவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

## கலைவிழா

(நவாலி)

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும நல்லூர் ஞானக்குழந்தை இல்லத்தின் வருடாந்த கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு நல்லூர் காமாட்சி மடாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-102)

## காணி அன்பளிப்பு

(வடலியடைப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையினர் பாடசாலையின் மைதானத்தை அண்டிய ஒன்றரைப் பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். (உ-21)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சேவி கண்ணாடித் தொழிற்சாலை பாதிக்கப்பட்டோர் ஊழியர்சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ-18)

## செபமாலைப்பேரணி

(பருத்தித்துறை)

திருத்தந்தை இரண்டாம் யோன பவுலின் வெள்ளி விழாவும் மாபெரும் செபமாலைப் பேரணியும் இன்று பி.ப.3.30 மணிக்குப் பருத்தித்துறையில் நடைபெறவுள்ளது.

இப் பேரணி பருத்தித்துறை புனித தோமையார் ஆலய முன்றலில் ஆரம்பமாகி புனித அந்தோனியார் வீதி, தும்பளை வீதி, ஓடக்கரை வீதி, சுப்பர்மட வீதிகள் ஊடாகச் சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு பருத்தித்துறைப் பங்குத்தந்தை அருட்திரு பயஸ் இருதயதாஸ் அடிகளார் தலைமையில் நற்கருணை ஆராதனை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (உ-52)

## புதிய கட்டடம் அமைப்பு

(கந்தர்மடம்)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் காரியாலயத்துக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. (உ-112)

## சைவத் திருமுறை விழா

(சங்கானை)

சங்கானை கல்விக்கோட்ட சைவத் திருமுறை விழாவும், சைவ நெறித்தொண்டு செயன்முறை நிகழ்ச்சிகளின் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் மாணவர்களின் பண்ணிசை, புராண படனம் மற்றும் கதாப்பிரசங்கங்கள் ஆகியன இடம்பெறவுள்ளன. (உ-34)

## மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வியில் முன்னேறிய மாவட்ட மாகப் பிரகடனப்படுத்தி விசேட ஒதுக்கீடு வழங்கப்படாததை ஆட்சேபித்து கல்வி ஊக்குவிப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் காலை 7.30மணிதொடக்கம் பி.ப.3.30மணிவரை இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (தி-61)

## பாம்புக்கடி சிகிச்சைக்கு மூவர் அனுமதி

(பளை)

ஒரே நாளில் பாம்புக்கடிக்கு இலக்காகிய மூவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த செவ்வாயன்று அனுமதிக்கப்பட்டனர்.

பளை அரசர் கேணியைச் சேர்ந்த ப.ரவீந்திரன் (வயது 31), முறிகண்டியைச் சேர்ந்த எஸ்.சுப்பிரமணியம் (வயது 53), வட்டக்கச்சி முருகன் வீதியைச் சேர்ந்த எஸ்.கைலைநாதன் (வயது 40) ஆகிய மூவருமே மேற்படி வைத்தியசாலையில் பாம்புக்கடிக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ-97)

# மெலிஞ்சிமுனை புனரமைப்புக்கு 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(கந்தர்மடம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், 10இலட்சம் ரூபா செலவில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் கீழ், 7இலட்சம் ரூபா செலவில பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருவதுடன் அப்பகுதியிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 30மலசல கூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், மெலிஞ்சிமுனைக் கிராமத்திற்கான 2கிலோமீற்றர் நீளமான பிரதான வீதியமைக்கும் பணிகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மேற்படி பணிகள் யாவற்றையும் மெலிஞ்சிமுனை கிராம அபிவிருத்திச்சங்கம் பொறுப்பேற்றுச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-112)

# தேசிய சதுரங்க அணியில் யாழ்.வீரர் சிவோதயன்


(யாழ்ப்பாணம்)

கடந்த சில வாரங்களாகக் கொழும்பில் தேசிய சதுரங்க அணிக்கான விரர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாண வீரர் சிவானந்தன் சிவோதயன் சிறப்பாக விளையாடித் தேசிய அணியில் இடம்பிடித்துக் கொண்டார். இவர் 8புள்ளிகளைப் பெற்று அணியில் நான்காவதாக வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துல ரஸல்ட், டுலான் எதிரிசிங்க, ஏ.ரி.பி.அத்துகோறள, எம்.டி.ஜெயசிங்க ஆகியோரும் இவ் அணிக்குத் தெரிவாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் சதுரங்க பயிற்றுநருமான சிவோதயன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியாவார். கடந்த 10வருடங்களாக யாழ்.மாவட்டமட்ட சதுரங்கப் போட்டிகள் பலவற்றில் கலந்துகொண்டு பலதடவைகள் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அண்மையில் கொழும்பு இஸ்பத்தான கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் இவர் தங்



கப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவர் நல்லூரைச் சேர்ந்த டாக்டர் சிவானந்தன் கமலராணி தம்பதிகளின் புதல்வராவார்.

# ரயில் நிலையங்களில் புகைப் பிடிக்கத் தடை

(கொழும்பு)

ரயில் நிலையங்களில் புகைப் பிடித்தலைத் தடைசெய்யும் ரயில்வே அதிகார சபையின் திட்டத்தின் கீழ் முதலில் கொழும்பு கோட்டை, மருதானை ரயில் நிலையங்களில் உடனடியாக அமுலாகும் வகையில் புகைப் பிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரயில்வே பொது முகாமையாளர் நிமல் விஜயசிங்க கருத்துக் கூறுகையில்,

ரயில் நிலையங்களில் புகைப் பிடிப்பதால் தமக்கு ஏற்படும் அசௌகரியங்கள் பற்றி பலரும் குறிப்பாகப் பெண்கள் முறைப்பாடு செய்துள்ளனர். எமது திட்டப்படி 2004ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலங்கையின் அனைத்து ரயில் நிலையங்களிலும் புகைத்தல் தடைசெய்யப்படும் என்றார். (உ-06)





பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர்தின விழாவிலே அதிதிகளாகப் பங்கேற்ற ஏ.என்.எஸ்.திருச்செல்வம் இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.ஏகாம்பரநாதன் மற்றும் அதிபர் ஆசிரியர்கள் பான்ட் வாத்திய இசைமுழங்க அழைத்துச் செல்லப்படுவதையும் பழைய மாணவிகள் சங்கச் செயலாளர் திருமதி ஜீ.தவரட்ணம் மங்கள விளக்கேற்றுவதையும் அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் பதில் அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:பரு.நிருபர்

# 43 நோயாளிகளுக்கு கடுமையான பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை

## வெளிநாட்டு டாக்டர்கள் நடத்தினர்

வவுனியா பெரியாஸ்பத்திரியில் கடந்த 14ஆம் திகதியிலிருந்து பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. டாக்டர் சாள்ஸ் வைவாவின் தலைமையிலான பிரித்தானிய- மலேஷிய டாக்டர்கள் அடங்கிய குழுவினர் இந்த சிகிச்சை முகாமை நடத்தி வருகின்றனர். இம் மாதம் 21 ஆம் திகதி வரை சிகிச்சைகள் தொடரவுள்ளன.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனவின் முன்முயற்சியில் நடைபெற்று வரும் இப் பிளாஸ்டிக் அறுவைசிகிச்சைக் குழுவில், பேராசிரியர் கே.தம்பிராஜா (மலேஷியா) டாக்டர் எஸ்.சாத்தப்பன், (மலேஷியா) டாக்டர் எஸ். சோமசுந்தரம்(மலேஷியா) டாக்டர் ஏ.வேலாயுதபிள்ளை (பிரித்தானியா) டாக்டர் பி.ஜெயரட்னம் (பிரித்தானியா) டாக்டர் ஏ.பாலுவி (பிரித்தானியா) ஆகியவர்கள் பணியாற்றுகின்றனர்.

வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இந்த அறுவைசிகிச்சையினால் பயனடைந்துள்ளனர். மொத்தம் 220 பேர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு 43 பேருக்கு மிகக் கடுமையான பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சைகள் நடத்தப்பட்டன. இதற்கு மேலாக இந்த மருத்துவ நிபுணர்கள் உள்ளூர் டாக்டர்களுக்கு விரிவுரைகளும் வழங்கியுள்ளனர்.

கடந்த இரு வருடங்களில் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, அகதிகள் விவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மருத்துவ சேவைத் திட்டங்களில் இது 16வது சிகிச்சையாகும். ஜேர்மன் உதவி அமைப்பு (German help foundation-Srilanka) இந்தத் திட்டத்திற்கு உதவி வழங்கி வருகின்றது. (பி)

### தீவக வலயப் பாடசாலைகளின்

# உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(கந்தர்மடம்)

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டி கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் பங்குபற்றி 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:-

14 வயதுக்கிடைப்பட்டோர் முதலாம் இடம்:- வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாசாலை.

இரண்டாம் இடம்:- புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

மூன்றாம் இடம்:- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

16 வயதுக்கிடைப்பட்டோர் முதலாம் இடம்:- வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாசாலை.

இரண்டாம் இடம்:- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

மூன்றாம் இடம்:- காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

18 வயதுக்கிடைப்பட்டோர் முதலாம் இடம்:- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

இரண்டாம் இடம்:-காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.

மூன்றாம் இடம்:- புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயம்.

மேற்படி போட்டி முடிவில் வெற்றி பெற்றவர்களுக்கு தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வேணு கோபாலதாசன் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (உ-112)

# மனித உரிமைகளை பேணும் வகையில் பொலிஸ் சேவை மாற்றியமைக்கப்படும்

## பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பொலிஸ் சேவையை மாற்றி அமைப்பதே தமது குறிக்கோள் என பதில் பொலிஸ்மா அதிபர் ரி.ஐ.டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அச் செய்தி நிறுவனத்துக்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பொலிஸ் சேவையையே தற்போது மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்குத் தீர்வுகான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவினால் குற்றங்களைத் தடுப்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61)

# ஒழுக்கம் நிறை மாணவர்களின் தேவை இன்றைய சமூகத்தில் உணரப்பட்டுள்ளது

## வர்த்தகர் சபா.புஷ்பநாதன் உரை

(யாழ்ப்பாணம்)

ஒழுக்கம் நிறைந்த மாணவர்களே இன்றைய சமுதாயத்திற்குத் தேவை. தேச பக்தர்களாலும், புத்திஜீவிகளாலும் இதன் அவசியம் குறித்துப் பேசப்படுவதையும் அதன் அத்தியாவசியத்தையும் மாணவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற உலக ஆசிரியர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளரும், பிரபல வர்த்தகருமான சபா. புஷ்பநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மாணவர் தலைவர் எஸ். சுதர்சன் தலைமையில் நடந்த இவ்விழாவில் புஷ்பநாதன் தொடர்ந்தும் கூறுகையில்,

ஆசிரியர்தொழில்தான் உலகில் மிக உயர்ந்த தொழில் வேறு எந்தத் தொழிலுக்கும் சர்வதேச தினம் என்ற ஒரு தினம் கொண்டாடப்படாத நிலையில், ஆசிரியர்களுக்கு மாத்திரம் தினம் கொண்டாடப்படுவது அவர்களுக்கு சர்வதேச ரீதியாக அளிக்கப்பட்ட பெருமையாகும்.

ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதன் மூலமும் ஆசிரிய சமூகத்தைப் போற்றி மதிக்கின்ற பழக்கத்தை வளர்ப்பதன் மூலமும் மாணவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள முடியும் என்றார். (உ-8)

# பாகிஸ்தானியப் பிரஜைகளை நாடுகடத்த முடியாத நிலை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கையூடாக இத்தாலி செல்ல முயன்ற 45 பாகிஸ்தானியர்களையும் நாடு கடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்கள் வைத்திருந்த விமானப் பயணச்சீட்டுக்கள் காலாவதியாகி விட்டதே இந் நிலைமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து இலங்கையில் உள்ள பாகிஸ்தானியத் தூதுவராலயத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திக்வெல்ல கடற்பிரதேசத்தில் வைத்து கடந்த யூலை மாதம் 30ஆம் திகதி சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்ட 254 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்களில் 54 பேர் ஏற்கனவே நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஏனையோர் தற்போதும் சிறைத் தண்டனை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (தி-61)

## தென்னம்பிள்ளை விநியோகம்

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு அண்மையில் மூவிமெண்டோ நிறுவனம் ஆயிரத்து 150 தென்னம்பிள்ளைகளை வழங்கியுள்ளது. அராலி மத்தி, மூளாய் சுழிபுரம் மத்தி, சுழிபுரம் மேற்கு மற்றும் தொல்புரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள மக்களுக்கே குடும்பம் ஒன்றுக்குத் தலா 7 தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. (உ-70)

## வறுமைக் கோட்டின் கீழ் வாழும்

# மாணவர்களின் கல்விக்காக ஒரு கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கென அரசாங்கம் ஒருகோடி 30 லட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கியுள்ளது.

அறிவொளி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் சமுர்த்தி அமைச்சினால் இந்நிதி வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் 350 ரூபா வீதம் தொடர்ந்து இரு வருடங்களுக்கு வழங்கப்படவுள்ளது. (தி-61)

# ஊர்காவற்படை வீரர்களுக்கு பயிற்சி முகாம் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

ஊர்காவற்படை வீரர்களுக்கான பயிற்சி முகாம் ஒன்றை களுத்துறை சேருவில பிரதேசத்தில் அமைப்பதற்கு உள்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், தற்போது மூடப்பட்டுள்ள சேருவில கனிஷ்ர வித்தியாலய விளையாட்டுத் திடலில் இப்புதிய முகாம் அமைக்கப்படவுள்ளது.

சுமார் 30மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இம் முகாமில், வருடாந்தம் நூற்றுக்கணக்கான ஊர்காவற்படையினருக்கும், இராணுவத்தினருக்கும் இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி-61)

# தேர்தல் முறையை மாற்றும் காலம் வந்துவிட்டது

## பா.உ.தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான காலம் வந்துவிட்டதாகத் தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மல்வத்த பீடாதிபதியை நேற்று முன்தினம் கண்டியில் சந்தித்துக் கலந்துரையாடிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் நாட்டின் பொருளாதார நிலைமைகள், தற்போதைய சமாதான முயற்சிகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. (தி-61)

## அரச அதிபருடன் சந்திப்பு

(தொல்புரம்)

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் விவசாயம் மற்றும் கடற்றொழிலில் ஈடுபடுவோரின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தறியும் நோக்கில் யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதனுடனான சந்திப்பு, ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வலி- கிழக்கு பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-70)



சென். ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்னாள் அதிபர் எஸ்.தங்கராசாவின் பிரிவுபசார மற்றும் பதவியுயர்வை பாராட்டிக் கௌரவிப்பு விழாவில், பாடசாலை அதிபர் த.ஞானப்பிரகாசம் பாடசாலைக் கொடியை ஏற்றுவதையும், அருகில் விழா நாயகன் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் நிற்பதையும் காணலாம். படம்:- அல்லைப்பிட்டி நிருபர்

யாழ்ப்பாண மாநகரசபை

## அறிவித்தல்

**நவீனசந்தை கடை இல. 184 11ம் கட்டட குத்தகையை இரத்துச் செய்தல்**

நவீனசந்தை 11ம் கட்டடத்தில் அமைந்துள்ள இல. 184 கடையில் வாடகை உரிமையாளர் தொடர்ச்சியாக வாடகைக் கட்டணத்தைச் செலுத்தாமையால் அக்கடைக்கான குத்தகையை இரத்துச்செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க விரும்பும் குத்தகையாளர் அல்லது அவரது வாரிசோ தமது ஆட்சேபனையை எதிர்வரும் 17.11.2003க்கு முன் ஆணையாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர சபை அலுவலகம், யாழ்ப்பாணம். 16.10.2003 (சி-6750)

இ.இராமலிங்கம், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

இன்று ஒரு தகவல்

# கல்லீரல்

நாம் சாதாரணமாக ஓடும் ஓட்டத்திற்கும் அவசரமாக ஓடும் ஓட்டத்திற்கும் அதிகளவு வித்தியாசம் உண்டு. திடீரென்று நம்மை ஓர் வெறிநாய் துரத்திக்கொண்டு வருகின்றது என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்போது நாம் ஓடுகின்ற வேகம் இருக்கின்றதே அது எமக்கே ஆச்சரியமாக இருக்கும். இவ்வளவு வேகமாக எம்மால் ஓடமுடிகின்றதா என்று நாம் நினைத்துப் பார்ப்போம் அப்படி ஓடிவருகின்றோமல்லவா? நான் வேகமாக ஓடிவந்து வெறிநாயிடமிருந்து தப்பித்துக் கொண்டேன் என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். ஆனால் அந்தப் பெருமைக்கான முழுப் பொறுப்புமே யாரைச் சேருமென்றால் கல்லீரலைத்தான் சேரும்! அது தான் அவசர காலத்திற்குத் தக்கபடி செயற்பட்டு நம்மைக் காப்பாற்றுகின்றது.

கல்லீரல் ஒருபோதும் சும்மா இருப்பதில்லை. 24மணி நேரமும் கிளைக்கோஜன் எனும் ஒருவகையான மாச்சத்தைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளும். அதில் கொஞ்சத்தை எடுத்துக் குளுக்கோஸாக மாற்றிக் குழாய்கள் மூலமாகத் தேவையான பகுதிகளுக்கு அனுப்புகின்றது. அதனால்தான் நாம் வேகமாக ஓடி நாயிடமிருந்து தப்பித்துக் கொள்ளமுடிகின்றது.

கல்லீரலுக்கு இது போன்று பல வேலைகள் உண்டு. இதுவரை கல்லீரல் செய்து வரும் வேலைகளில் 500ற்கும் மேற்பட்டதைக் கண்டு பிடித்துள்ளனர். இன்னமும் புதிது புதிதாகக் கண்டு பிடித்துக் கொண்டும் இருக்கின்றனராம்.

காலையில் உணவு உண்கின்றோம். உணவு எமது வயிற்றினுள் செல்கிறது. உடனே கல்லீரலில் பல சிக்கலான இரசாயன மாற்றங்கள் நிகழ ஆரம்பிக்கின்றதாம். கல்லீரலில் இருந்து பித்தநீர் புறப்பட்டு சிறு குடலுக்கு வருகின்றது. கொழுப்புச் சத்துக்களை ஜீரணம் செய்ய உதவுகின்றது. சிறு குடலில் இருக்கும் மென்சவ்வுகள் கொழுப்பைக் கொழுப்பு அமிலமாக மாற்ற உதவுகின்றன. இவையெல்லாம் கல்லீரலின் உள்ளே செல்கின்றது. அங்கே உடன் கொழுப்பாக மாற்றமடைகின்றது. இரப்பையினுள்ளும், சிறு குடலினுள்ளும் புரதங்கள் அமினோ அமிலங்களாக மாற்றம் பெறுகின்றது. இவையாவும் உடலில் திசுக்கள் உருவாவதற்கு மிகவும் தேவையானது. புரதம் ஜீரணிக்கப்படுகின்றபோது அமோனியா எனும் நச்சுபொருள் உண்டாகின்றது. கல்லீரல் மறுபடியும் தலையிட்டு அமோனியாவை யூரியாவாக மாற்றுகின்றது. இந்த யூரியாவை சிறுநீரகங்கள் வெளியேற்றி விடும்.

மனிதன் உட்கொள்ளும் அற்கஹோல், நிக்கொட்டின், போதை மருந்துகள் போன்ற நச்சுப்பொருட்களைச் சிதைத்து அவற்றின் கேடு விளைவிக்கும் தன்மையைக் குறைப்பது இந்தக் கல்லீரல் தான். இப்படிக் கல்லீரல் எப்போதுமே மிகுத்த பிஸியாக இருக்கும். இதற்கு இவ்வளவு அவசரத் தன்மையை நாம் கொடுக்காது இருக்க வேண்டுமானால் நாம் குடிக்காமல், அற்கஹோலை உபயோகப்படுத்தாமல், புகைப்பிடிக்காமல் இருந்தாலே கல்லீரலுக்கு ஓய்வு கிடைக்கும்.

இதயம் தனது சக்தியில் கால் பங்கை கல்லீரலுக்கு இரத்தம் அனுப்புவதிலேயே செலவழித்து விடுகின்றதாம். நமது உடலில் இரத்தத்தின் அளவு கூடிப்போய்விட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். இதயத்திற்கு வேலைச் சுமை அதிகமாகிவிடும். இரத்தத்தின் அளவு அளவுக்கு மீறிப் போய்விட்டதென்றால் கல்லீரல் தனது கொள்ளளவை விரிவுபடுத்திக் கொள்ளும். அதிகப்படியாகவுள்ள இரத்தத்தை அதற்குள் சேமித்து வைத்துக்கொள்ளுமாம்.

நமது உடலிற்குக் கல்லீரல் மிகவும் முக்கியமானதோர் உறுப்பு. அதனால் அது தனக்கேற்படுகின்ற சேதங்களைத் தானே சரி செய்துகொள்ளுமாம். சில புற்றுநோயாளிகளின் உடலில் இருந்து 90 சதவீதம் வரை கல்லீரலை அறுத்தெடுத்துள்ளார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். ஒரு சில மாதங்களுக்குள்ளேயே அது தானாக வளர்ந்து இயல்பான அளவுக்கு வந்து விடுகின்றதாம். மிகவும் கடுமையான சேதம் ஏற்பட்டால் தான் கல்லீரல் தனக்குக் கோளாறு இருப்பதாக வெளியில் காட்டும். கல்லீரல் கோளாறுகளைக் கண்டுபிடிப்பதற்கு மருத்துவத்தில் இப்போது நிறைய வழிமுறைகள் இருக்கின்றனவாம். கல்லீரலில் சுழற்சி ஏற்படும். சுருக்கம் வரலாம் கோளாறு எப்படி இருப்பினும் சிகிச்சை முறை ஒன்று தானே.

கல்லீரலில் கோளாறு இருந்தால் ஆரம்ப அறிகுறிகள் தெளிவற்று இருக்குமாம். நோயாளிக்கு களைப்பு, தளர்ச்சி, மனக்குழப்பம் போன்றவை ஏற்படும். இலேசாகக் குமட்டல் உணர்ச்சி கூட இருக்கலாமாம். நோயாளிகளை படுக்கச் செய்து மூச்சை நன்றாக இழுத்து விடச் சொல்லி வயிற்றை அழுத்திப் பார்ப்பார்கள். ஈரல் வீங்கி இருக்கின்றதா என்று பார்ப்பதற்காகத்தான். ஏனென்றால் இதை வைத்துத்தான் வியாதி உள்ளதா என்று கண்டு பிடிக்கமுடியும். வியாதிகளைக் கண்டு பிடிப்பதில் இப்படியும் ஓர் முறை இருக்கின்றதாம்.

ஒருவர் வைத்தியரிடம் சென்றார். வைத்தியர் இவரது கையைப்பிடித்துப் பார்த்துவிட்டு "காய்ச்சல் அடிக்கிறதா? என்று கேட்டார். இவர் ஆமாம்!" என்றார். "உடல் மிகவும் வலிக்கின்றதா?" என்றாராம் ஆமாம்! இதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? என்று கேட்டார் இவர். "அடித்தால் வலிக்கத்தானே செய்யும்" என்றார் டாக்டர்.

இளசை எஸ்.சுந்தரம்

# தென்னிலங்கை அரசியல்வாதிகள் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்

## மன்னார் ஆயர் வேண்டுகோள்

(மன்னார்)

தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டிற்கு வந்திருப்பதினால் தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகளும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.

இவ்வாறு மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு எமது தாயகம், எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதை வலியுறுத்தி மன்னாரில் நடத்தப்பட்ட பொங்குதமிழ் நிகழ்ச்சியின் போதே மன்னார் ஆயர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் மன்னார் ஆயர் தொடர்ந்து பேசுகையில்,

தென்னிலங்கையில் உள்ள சிங்கள, அரசியல் வாதிகள் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குடன் செயற்பட்டு இந்நாட்டை ஒரு அழகிய நாடகக் கட்டியெழுப்ப முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். (வ)

## 115 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக் காலை வரை நடத்தப்பட்ட 24 மணி நேரத் தேடுதலில் 115 பேர் கைது செய்யப்பட்டனர்

இத் தேடுதல் நடடிக்கையின் போது 163 விதித் தடைகளும், 63 ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. (தி-61)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தர சேவையில் அமர்த்தவேண்டும்

## பிரதமருக்கு சம்பந்தன் கடிதம்

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பிரச்சினை பலவருடங்களாகவே




தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது. இதனால் இந்த ஆசிரியர்கள் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன் சத்தியாக்கிரகம் செய்து வருகிறார்கள். எனவே இவர்கள் விடயமாக விரைவில் நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சமபந்தன் பிரதமமந்திரிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் வற்புறுத்தியுள்ளார்.

சம்பந்தன் பிரதமருக்கு அனுப்பியுள்ள நீண்ட கடிதத்தில் தெரிவித்துள்ள முக்கிய அம்சங்கள் பின் வருமாறு :-

வடக்கு-கிழக்கு பிரதேசத்திலுள்ள தமிழ் மூலப்பாடசாலைகளின் முழுஅளவிலான ஆசிரியர் பற்றாக்குறை 4 ஆயிரத்து 26 ஆகும். இந்தப் பாடசாலைகளில் ஆங்கிலம கற்பிக்கத் தேவையான ஆசிரியர் தொகை 3ஆயிரத்து 39 ஆகும்.

தற்பொழுது ஆயிரத்து 106 ஆங்கில ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பற்றாக்குறை ஆயிரத்து 933 ஆகும். சிங்கள மூலப்பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களின் தேவை 533. தற்பொழுது 352 பேர் சேவையில் உள்ளனர். எனவே 183ஆங்கில ஆசிரியர்கள் இப்



பாடசாலைகளுக்குத் தேவைப்படுகிறார்கள்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். அவ்வாறு நியமிக்கப் பட்டவர்களில் ஓய்வூதியம் பெறுகிறவர்களும் அடங்குவர். இவர்களைத் தவிர்த்து ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 696 ஆகும். இவர்களின் விடயமே இன்று பிரச்சினைக்குரியதாக இருந்து வருகின்றது. இவர்களை நிரந்தர சேவையில் அமர்த்துமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

ஆங்கில ஆசிரியர்கள் பற்றிய விபரம் மற்றும் பற்றாக்குறைகள் பற்றிய பட்டியல் ஒன்றையும் சம்பந்தன் பிரதமருக்கு அனுப்பியுள்ளார். (பி)

## இராசி பலன்

**18. 10. 2003**

**(ஐப்பசி 1, சனி)**

**அட்டமி - பி. இ. 2.26 வரை**
**புனர்பூசம்- மு.இ. 7. 51 வரை**
**இராகுகாலம் - 09.02 - 10.32**
**சுபநேரம் - 3.02- 4.32**

**மேடம்**
ரோகநிலை, மாதர் நட்பு, புதிய விடயமறிதல், முயற்சி தாமதம்.

**இடபம்**
பிரயாண நன்மை, காரிய சித்தி, கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
வீண்செலவு, காரிய தாமதம், அதிக வார்த்தை, வேலைக்கஷ்டம்.

**கடகம்**
வெகுமானம், சயன சுகம், புதிய முயற்சி, விருந்துபசாரம்.

**சிங்கம்**
சோம்பல் நிலை, பிரயாணக் கஷ்டம், தனவிரயம், காரிய தாமதம்.

**கன்னி**
சிநேகிதர் நல்வரவு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம், பெருமையடைதல்.

**துலாம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி, ஆரோக்கியம், தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
சரீரப் பிரியாசை, மனச்சஞ்சலம், எதிர்பாராத செலவு, தேகாந்திர வாசம்.

**தனுசு**
எடுத்த கருமங்கள் தாமதமாகும், மனக்கவலை, பொருள் விரயம், சரீரபீடை

**மகரம்**
கீர்த்தி, முயற்சி கைகூடும், குடும்ப நலம், பிரயாண நன்மை.

**கும்பம்**
சத்துரு ஜெயம், நினைத்த காரியம் கைகூடும் வாய்ப்பு, செய்தொழில் விருத்தி, தனவரவு.

**மீனம்**
காரிய தாமதம், வியாபார நன்மை, குடும்பக் கவலை, பணத்தட்டுப்பாடு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# 75 நாள் வீடமைப்புத் திட்டப்பணிகள் துரிதம்

(தொல்புரம்)

இந்து கலாசார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 75 நாள் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வலி- மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் மற்றும் மலசலகூடங்கள் ஆகியன துரித கதியில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் கீழ் மேற்படி பகுதியிலுள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகளில் வட்டுக்கோட்டை கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலையம் ஈடுபட்டுள்ளது.

அத்துடன, மேற்படி பகுதியிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 35 மலசலகூடங்களைப் புதிதாக அமைத்தல் மற்றும் 72 மலசலகூடங்களைப் புனரமைப்புச் செய்தல் ஆகிய பணிகளும் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீடுகள் அமைப்புப் பணிகளை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நேரில் பார்வையிடவுள்ளார்.

(உ-70)

# அரச ஊழியர்களுக்கு மும்மொழிகளிலும் பயிற்சி

(சுதுமலை)

மாகாணசபையின் கீழ் உள்ள அனைத்து அரசாங்க ஊழியர்களும் மும்மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு அரசாங்கம் விசேட திட்டம் ஒன்றை அடுத்த வருடம் முதல் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் சகல திணைக்களத் தலைவர்களிற்கும் விசேட சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அரசகரும மொழித் திணைக்களத்தால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள தெரிவு செய்யப்பட்டு இப்பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும் இதன் மூலம் ஒவ்வோர் ஊழியரும் குறைந்தது இரு மொழிகளில் பயிற்சி பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திணைக்களத் தலைவர்கள், அலுவலக கடமைகள் பாதிப்புறாத வகையில் தமது அலுவலக ஊழியர்களை இப் பயிற்சியில் கலந்து கொள்வதற்கு வழி செய்யுமாறும் இது தொடர்பாக சகல ஊழியர்களது விருப்பத் தெரிவுகளையும் விரைவில் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

ஒல்வதறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்
– குறள்

வலம்புரி

## கனடியஅமைச்சர் கூறிய யதார்த்தம்

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் சமஷ்டி முறையிலான தீர்வே ஒரே வழியாகும். இவ்வாறு கனடிய வெளிவிகார அமைச்சர் பில்கிரஹம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த அமைச்சர் பில் கிரஹம் யாழ்ப்பாணத்து நிலைமைகளை நேரில் அறிந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு நேரில் வருகை தந்து யுத்தத்தால் அழிந்து போன இடங்களைப் பார்வையிட்டுள்ளமை ஓர் முக்கிய நிகழ்வென்றே கூறவேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த கனடிய அமைச்சர் தான் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தனது நிலைப்பாடு சிலவற்றை வெளிப்படையாகக் கூறியுள்ளார். அவர் கூறிய கருத்தில் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின், சமஷ்டி முறையிலான தீர்வே ஓரே வழி என்பதும், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை கையளிப்பதன் மூலமே தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடர முடியும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த கனடிய வெளிநாட்டு அமைச்சர் இலங்கையின் இனப்பிரச்சினைகுறித்த யதார்த்த நிலைமைகளை வெளிப்படையாக கூறியுள்ளார் எனில் அவர் எவ்வளவு தூரம் இலங்கை இன விவகாரம் பற்றி அறிந்துள்ளார் என்பதை நாம் ஊகித்துக் கொள்ள முடியும்.

இலங்கையின் இன விவகாரம் பற்றி எதுவுமே விளங்கிக் கொள்ளாமல் ஏதோ வந்துவிட்டோம், எமக்குத் தெரிந்த கருத்துக்களை கூறிவிட்டுச் செல்வோம் என்ற நிலைப்பாட்டில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இருக்கின்ற போது, அமைச்சர் பில் கிரஹம் பாதிக்கப்பட்ட ஓர் இனத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்து கொண்டு இடைக் கால சபை குறித்தும், சமஷ்டி முறை குறித்தும் கருத்துக் கூறியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

அதேவேளை, கனடாவில் வாழ்கின்ற யாழ்ப்பாணத்து மக்கள் கேட்டுக் கொண்டதன பேரிலேயே தான் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருப்பதாக அவர் கூறியிருப்பது அவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது.

கனடாவில் வாழ்கின்ற யாழ்.மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து யாழ்ப்பாணத்திற்கு நேரில் விஜயம் செய்து யுத்த அழிவுகளையும், இராணுவம் ஆக்கிரமித்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்களையும் பார்வையிட்ட அமைச்சர் கிரஹகம் தான் கூறிய கருத்துக்களை அரசு அமுல்படுத்துவதற்த அழுத்தம் கொடுக்க வேண்டும்

# இசையால் புலன்களை வசமாக்கும் மனிதனால் ஆன்மாவை அறியமுடியும்

**ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் இளைஞர் பிரிவினால் நடாத்தப்படும் ''இசை அமுதம்'' நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை பி.ப. 4.00 மணி முதல் 6.00 மணிவரை திருநெல்வேலி நிலையத்தில் (சேர் பொன் இராமநாதன் வீதி, பல்கலைக் கழகம் முன்பாக) நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

மனிதனின் அடிப்படை இயல்பே ஆத்மீகம்தான் என உபநிடதங்கள் கூறுகின்றன. உடலில் - மனச்சேர்க்கையின் பின்னணியில் உணர்வு (சித்) மற்றும் உண்மை (சத்) இவற்றை இயல்பாகக் கொண்ட ஆன்மா உள்ளது. எல்லையற்ற தன்மையே எமது உண்மையான இயல்பு. மனிதர்களைத் தீவிரமாக ஆராய்ந்த உபநிடதங்களின் ரிஷிகள் இப்பேருண்மையை அறிந்துகொண்டனர்.

ஆன்மா எல்லா ஜீவன்களிடமும் உள்ளது. ஆனால், மறைந்துள்ளது. அது தெய்வீகமான தூய உணர்வு. என்றும் சுதந்திரமாக அழிவில்லாமல் எல்லோரிடமும் உள்ளது. அது மறைந்துள்ளது. அவ்வளவுதான். ரிஷிகள், மெய்ப்பொருள் உணர்ந்த ஞானிகள். அதனால் அவர்கள் அதைக் கண்டுள்ளார்கள். அவ்வாறாயின் மனிதர்களால் அதைக் காணமுடியாதா? முடியும்; எப்படி?

நுண்ணிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்காக மனம் பயிற்சி பெறும்போது ஆன்மா என்னும் இந்த நுண்ணிய உண்மையை அறிந்துகொள்ள முடியும். புலன்களை ஒழுங்குபடுத்துவதே மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு வழியாகும். புலன்களின் கட்டுப்பாடுதான் மனிதனின் ஆத்மீக நிறைவின் அடிப்படை இதுவே இறையருளின் வெளிப்பாடு.

இவ்வழி, புலன்களை ஒருமைப்படுத்தி ஆன்மீக நிறைவிற்கு வழி சமைப்பதுதான் இசை. இசை என்பது இசைவிப்பது; வசப்படுத்துவது என்பது பொருள். இவ் இசையானது மகிழ்வூட்டுவது மட்டுமின்றி அதற்கப்பாலும் சென்று எமது உணர்வுகளைத் தூண்டி உயர்ந்த ரஸானுபவத்தை அனுபவிக்க வைக்கிறது. மேலும், கற்பனையைத் தூண்டி எம் மனதில் இருக்கும் தெளிவின்மையைப் போக்குகின்றது. ஆனந்த ரஸத்தை உருவாக்குவது தான் இதனது நோக்கம் என்கிறார் பேராசிரியர் சாம்பமூர்த்தி.

வானத்தின் இடியோசை, கடலின் அலையோசை, மரங்களின் அசைவோசை, வண்டுகளின் ரீங்காரம், வீசும் தென்றற் காற்றின் ஓசை என்பன போன்ற இயற்கையோடு கூடிய இசையானது இறைவனின் ஓங்கார சொரூபமேயாகும். இதனாலேயே தேவாரத் திருப்பதிகங்களில் இறைவனை ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே... என்றும்,'' ஏழிசையாய் இசைப்பயனாய்... எனவும், சந்தத் திருப்புகழில் நாத விந்து கலாதீ நமோ நம... என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். அபிராமிப் பட்டர் அன்னை அபிராமியை விளிக்கும்போது ''இசைவடிவாகி நின்ற நாயகியே... என்கிறார்.

வேத இலக்கியங்களிலும், சைவாகமங்களிலும் இசை இறைத்தன்மையுடையதாகப் போற்றப்படுகின்றது. இத்தகைய தெய்வீகத் தன்மை வாய்ந்த இசையானது உருக் கொடுக்கப்பட்டு பாடல்களாக இசைக்கப்படும் பொழுது கேட்பவர் மனத்து எண்ணங்களை தோற்றுவித்து உணர்வுகளைத் தட்டியெழுப்பி ஆனந்தப் பரவசமாக்கும். இசை இன்பத்தால் உணர்வுகள் ஒன்றும். அதனால், மனிதர்களாகிய எமது மனம் ஒருமைப்படும். எங்கு மனம் குவிகின்றதோ அங்கு ஆன்மீக விழிப்புணர்ச்சி ஏற்படும். ஆனமீகம் வெளிப்பட ஒருமை உணர்வு ஏற்படும். இவ் ஒருமை உணர்வு ஏற்படும் பட்சத்தில் அனைத்தையுமே ஒன்றாகக் காணலாம். இன்னொரு வகையிற் கூறப்போனால், அனைத்துச் செயல்களும் நம் மனத்துள் ஏற்கனவே இருக்கின்ற ஆற்றலை வெளியே கொண்டுவருவதற்கான - ஆன்மாவை விழிப்புணர்வாக்குவதற்கான ஒரு சாதனம்தான் இசையெனலாம். மனம் ஒருமுகப்பட்டு அமைதியாக இருக்கும்போது தான் அதன் ஆற்றல் முழுவதும் நற்செயல் புரியப் பயன்படும்.

## இயற்கை மீட்டுகின்ற இசை இறைவனின் ஓங்கார சொரூபம்

இப் பிரபஞ்சமே இசைவடிவானது. இசையானது இசைக்கப்படும் பொழுது பிரபஞ்சமே எம்முள் அடங்கும் ஓர் உணர்வு ஏற்படும். அப்போது எம்முள்ள உள்ள அகங்காரம் தானாகவே கரைந்துவிடும். இசையானது அசையாத கல் போன்ற மனங்களையும், கரைய வைக்கின்ற வியத்தகு அற்புதம் உடையது. உடல் அளவில், மன அளவில், ஆன்மீக நேயமளவில், ஆரோக்கியத்தை நல்கும் தன்மையுடையது. பிரபஞ்சத்தையே ஒழுங்குபடுத்தும் இசையானது பஞ்சபூதங்களையும் லயிக்கவைக்கும் தன்மை கொண்டது.

அன்புப் பிரவாகத்தை நம்முள் ஏற்படுத்தும் இசையானது, எமக்கு ஆத்ம சுதந்திரத்தை ஏற்படுத்தி ஆனந்தத்தைக் கொண்டுவரும் அதுவே ஆத்ம விடுதலை. விடிவாமளவும் விளக்குப்போன்று ஆன்மீக விடுதலைக்கு விளக்காக இசை உள்ளதெனில் அது மிகையாகாது. □

திருமதி சாவித்திரிதேவி ரவிச்சந்திரன்

# படையினரின் அடாத செயல்களுக்கு கண்காணிப்புக்குழு தலையாட்டுகிறது

## தமிழீழ விடுதலைப் புலிகள் விசனம்

(வவுனியா)

படையினரின் கெடுபிடிகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் வவுனியா மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு நீண்ட கடிதம் ஒன்றினை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 12ஆம் திகதி விபத்துக் காரணமாக உயிரிழந்த மாவீரர் 2ஆம் லெப்டினன் ஆழிவேந்தனின் வித்துடலை வவுனியா பரணிக்குளம் என்னும் முகவரியில் உள்ள அவரது பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக எடுத்துச்செல்லப்பட்டபோது, ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டது.

இம் மாவீரரின் வித்துடலில் தமிழீழத் தேசியக்கொடி போர்த்தப்பட்டதனாலேயே தடுத்து நிறுத்தியதாகப் படையினர் காரணம் கூறியதை அடுத்து எம்மால் அக்கொடி எடுக்கப்பட்டது.

நாம் உடனடியாகக் கண்காணிப்புக் குழுவினராகிய உங்களின் ஊடாகவே இராணுவத்தினருக்கு இது விடயத்தைத் தெளிவுபடுத்த முற்பட்டபோது கண்காணிப்புக் குழுவினராகிய உங்களால் ஒரு பட்டியல் தரப்பட்டது.

அதில் சீருடையைத் தவிர்த்தல், தமிழீழத் தேசியக் கொடியைத் தவிர்த்தல், ஒலிபெருக்கி அறிவித்தல் செய்யலாகாது, அஞ்சலிக் கூட்டம் நடத்தக்கூடாது, வித்துடலை எடுத்துக்கொண்டு ஊர்வலமாக செல்லக்கூடாது, இச்சம்பவம் நிறைவுறும்வரை கண்காணிப் புக் குழு கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் போன்ற விடயங்கள் வாசித்துக் காட்டப்பட்டன.

இதிலிருந்து சாவடைந்த ஒருவரின் இறுதி நிகழ்வைச் செய்வதற்குப் படையினர் எந்தளவு கெடுபிடிகள் விதிக்கின்றார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இது ஒரு போர் நிறுத்த உடன்படிக்கை மீறலாகும். ஏனெனில், சாதாரண மரணச் சடங்குகளைக் கூடச் செய்ய அனுமதிக்க முடியாது என்று படையினர் உத்தரவு விதிக்க, அதனைக் கண்காணிப்புக் குழுவினராகிய நீங்களும் எம்மீது திணிப்பதற்கு முற்படுகின்றீர்கள்.

சாதாரணமாக இலங்கைச் சட்டப்படி சாவடைந்தவரது சாவுச் செய்தியை வெளியில் அறிவிப்பதற்கு அனுமதியுண்டு. அதேபோல், அவரது உடலை மக்கள் கூடி ஊர்வலமாக எடுத்துச் சென்று இறுதிக் கடைமைகளை உரிய இடங்களில் செய்வதற்கும் அனுமதியுண்டு.

மேலும் சாவடைந்தவரை மக்கள் நேசிக்கும் தன்மைக்கேற்ப அவரது நினைவை மீட்டுக்கொள்ளும் அஞ்சலி நிகழ்விற்கும் அனுமதியுண்டு. இவையெல்லாம் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும், இவையெல்லாவற்றையும் செய்யமுடியாது எனப் புதுச்சட்டம் போடுகின்றார்கள். இதனை அமுல்படுத்த கண்காணிப்புக் குழுவினராகிய நீங்களும் வீரச்சாவு நிகழ்வு முடியும்வரை கண்காணிப்பில் ஈடுபட்டீர்கள்.

சிவில் நடைமுறைக்குட்பட்ட இவ் விடயங்களில் படையினர் தலையிடுவது எமது அரசியல் செயற்பாடுகளுக்கான தடையாகவே நாம் கருதுகின்றோம்.

அத்துடன், நாம் உங்களுக்குத் தெரியப்படுத்தியதைப் போலவே இந் நிகழ்வில் செயற்பட்டோம். இம் மாவீரனின் நினைவஞ்சலிக் கூட்டம் சம்பந்தமாக மக்கள் தீர்மானித்து உங்களிடம் தெரிவித்தார்கள்.

இவர் கல்வி கற்ற பாடசாலையில் ஓர் அஞ்சலி நிகழ்வு மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. அவ்வேளையிலும் படையினராலும், கண்காணிப்புக் குழுவினராலும் அதனை இடைநிறுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் செய்யும் நிகழ்வுக்குப் படையினரும், கண்காணிப்புக் குழுவினரும் தடைவிதிப்பதன் நோக்கம் என்ன? படையினர் போடும் புதிய புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்த கண்காணிப்புக் குழுவனர் விளைவது எம்மை விசனமடையச் செய்வதுடன், எமது அரசியல் கடமைகளைச் செய்வதற்கான தடையாக உள்ளது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதேபோன்ற செயற்பாடுகளை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்ள வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5.64.8)

## தினசரி தியானம்

### மோட்சம்

மோட்சம் என்பது விடுதலை பெறுதல் அல்லது முழுமை பெறுதல் என்பதாகும். ஆசை மோட்சத்துக்கு எதிரியாகும். மனிதர்களுடைய துன்பங்களுக்கும் இதுவே அடிப்படை. ஆன்ம விசாரணையாகிய உண்மையான ஞானத்தாள் தெளிவடைந்து விட்டீர்களானால், மோட்சம் கிடைத்துவிடும். சாத்வீகப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள், ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள் எல்லாத் துன்பங்களும் மறைந்துவிடும். மோட்சமாகிய பேரின்பத்தை அல்லது இறைவனை அடைவதோடு ஒப்பிடும் போது மூவுலகங்களிலிருந்தும் பெறக்கூடி இன்பங்கள் அனைத்தும் ஒன்றும் இலலாத வைகளே.

சுவாமி சிவானந்தர்

# காசநோய்ப் பிரிவை இடமாற்றக் கோரி கோப்பாய் மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில் அமைந்துள்ள காசநோய்ச் சிகிச்சைப் பிரிவை அங்கிருந்து அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி வைத்தியசாலையில் அமைந்துள்ள காசநோய் சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகள், கழிவுக்குழியில் இருந்து நிரம்பி வழிந்துமழைவெள்ளத்துடன் குடியிருப்பு பகுதிகளுக்கு அடித்துச் செல்லப்படுகின்றன.

இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேற்படி சிகிச்சைப் பிரிவை உடனடியாக அங்கிருந்து அகற்றக்கோரி நேற்றுப் பிற பகல 2.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை அப்பகுதி மககள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சுகாதாரசேவைப பணிப்பாளர் டாக்டர் சிவபாதம கோப்பாய் பிரதேச செயலாளா ந.கேதீஸ்வரன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுடன் கலந்துரையாடினர்.

இவ் வேளையில் அவர்களைச் சூழ்ந்துகொண்ட பொதுமக்கள் காசநோய் வைத்தியசாலையை அகற்றுவது குறித்து உறுதிமொழி வழங்கப்படவேண்டும் என கோரி அவாகளை அங்கிருந்து வெளியேறவிடாது மறியலில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி சிகிச்சைப் பிரிவை விரைவில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுகாதாரப் பணிப்பாளர் உறுதிமொழி வழங்கியதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை மேற்படி காசநோய் சிகிச்சைப்பிரிவுக்கு அருகில் உள்ள சுகாதார வைத்திய பணிமனையில் இன்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவிருந்தது.

இச சிகிச்சைப் பிரிவில் இருந்து வெளியேறும் கழிவுகளினால் தொற்று நோய் ஏற்படும் அபாயம் காணப்படுவதை அடுத்து போலியோ சொடடு மருந்து வழங்கும் நிகழ்வு அப்பகுதியிலுள்ள சனசமூக நிலையம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (த-7,79,5)

## புலிகளின்...

தலைவர் பிரபாகரனினால் திட்ட வரைபு பரிசீலிக்கப்பட்டபின் தீர்க்கமான முடிவுகளுடன் நோர்வே அரசு மூலமாக இலங்கை அரசிடம் இம் மாத இறுதி வாரத்தில் புலிகள் திட்ட வரைபை சமர்ப்பிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகளின மாற்று யோசனைகள் அடங்கிய இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபு இம்மாத இறுதியில் தமக்கு கிடைக்குமென அரசு நம்புவதாகவும், அதிலிருந்து இடைநிறுத்தி வைக்கப் பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இதேவேளை இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்குவதில் காணப்படும் காலதாமதம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை பாதிக்கும் என்பதால் அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளிடம் இலங்கை அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அதனை விடுதலைப் புலிகள் ஏற்க வேண்டும் எனவும், தமிழ் மக்களின் பல்வேறு தரபபினரும் பொது அமைப்புக்களும் மற்றும் சர்வதேச சமூகமும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ம)

## சமாதானப்...

கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகள் அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை ஒன்றின் மூலமே வடக்குக் கிழக்கில் அமைதிநிலை, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, அபிவிருத்தி நடைமுறைக்கு கொண்டு வரமுடியும்.

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியாத அரசியல் பேச்சுவார்த்தைகளால், எவ்வித பயனும் கிடையாது என்பதால், மக்கள் சமாதானப் பேச்சுக்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளார்கள்.

இதனைச் சர்வதேசம் உணர்ந்து இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்பு விரைவில் செயலுருப்பெற அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் தமிழ்ச்செல்வன் கேட்டுக் கொண்டார். (தி-61)

## வேகக் கட்டுப்பாடு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இராணுவப் பொலிஸாரால் இராணுவ வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்து முகமாக நேற்று முன்தினம் வேகக்கட்டுப்பாட்டுக் கருவியைக் கொண்டு சோதனை செயதனர். மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களும் சோதனை செய்யப் பட்டது. (உ-39)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவு மறறும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 16 நுண் கருத்திட்டங்களை மேற்கொள்ள வென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார். (உ-18)

## தேர்தல்...

கோரி தயானந்த திஸநாயக்க உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார். ஆனால் இவ் விவகாரத்தில் தாம் தலையிட மாட்டோம் என மேல்நீதிமன்றம் தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-6)

### நிமலராஜனின் வழக்கு இழுத்தடிப்புக்கு கண்டனம்

# யாழ். தகவல் திணைக்களம் முன்பாக ஊடகவியலாளர் மறியல்

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலை வழக்கு, இழுத்தடிப்புச் செய்யப்படுவதைக் கண்டித்து யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். செயலகத் தகவல் திணைக் களத்திற்கு முன்பாக நேற்று உண்ணாவிரதப் போராட்டமும் மறியல் போராட்டமும் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான இப் போராட்டம், பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது.

இப் போராட்டத்தில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கொழும்பு கண்ணதாசன் மன்ற உறுப்பினர்கள், யாழ். உயர் தொழிநுட்ப நிறுவன மாணவப் பிரதிநிதிகள், சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. (இ-7,43)

### பாலர் பாடசாலை

## விளையாட்டு விழா

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடனும் யு.என்.எச்.சி.ஆர்.இன் நிதியுதவியுடனும் நடாத்தப்படும் சாவகச்சேரி பாலர் பாடசாலைகளின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டு விழா இன்று பிற்பகல 1.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் யாழ் சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் வி.நிஷாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5)

# மோட்டார் சைக்கிள் – ட்ரக் மோதி விபத்துக்குள்ளானது

## புன்னாலைக்கட்டுவனில்சம்பவம்

(புன்னாலைக்கட்டுவன்)

இராணுவ ட்ரக் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 4.05 மணியளவில் புன்னாலைக் கட்டுவன் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைககிள் சேதமடைந்தது. அதனைச செலுத்தி வந்த இளைஞன் சிறுகாயங்களுக் குள்ளானார்.

இதேவேளை விபத்து நடந்ததை அடுத்து, அப்பகுதியில் திரண்ட பெரு மளவான பொதுமக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து வந்து நிலைமையை சுமுகமாக்கினர் (இ.39)



அயோத்தி[illegible] இராமர் கோவிலை நிர்மாணிக்க கோரி நிர்ப்பந்தித்து வரும் விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் நேற்று அயோத்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்திய போது பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு பிரயோகம் செய்து அவர்களை அடித்து கலைத்ததுடன் இந்து கடும்போக்காளர் ஒருவரை அடித்து இழுத்து செல்வதை படத்தில் காணலாம்.


## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 3ம் திகதி (20.10.2003) திங்கள் காலை 9.55 மணிமுதல் 10.48 மணிவரையுள்ள சுப வேளையில்

திருநிறைச் செல்வன்
திருவாளர் மகாலிங்கம் கனகலிங்கம்
அவர்களின் புத்திரன்
**சிவாஜிலிங்கம்**
(கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் மாவட்டம்)
அவர்களுக்கும்



திருநிறைச் செல்வி
திருவாளர் சிற்றம்பலம் சந்திரசேகரம்
அவர்களின் புத்திரி
**மலர்விழி**
அவர்களுக்கும்

வல்வெட்டித்துறை நெடியகாடு திருச்சிற்றம்பல பிள்ளையார் முன்னிலையில் திருமணம் நடைபெற திருவருள் பாலித்துள்ளமையால் அனைவரையும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

வல்வெட்டித்துறை

ம.கனகலிங்கம் குடும்பமும்
சி.சந்திரசேகரம் குடும்பமும்

(சி-6751)



## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.கணணி பக்க அமைப்பாளர்**
க.பொ.த. உயர் தரத்தில் சித்தி - இருபாலாரும்

**2.விற்பனை முகாமையாளர் (வெளிக்களம்)**
க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி - ஆண்கள் மட்டும்

**3.அலுவலகச் செய்தியாளர்கள்**
க.பொ.த. உயர் தரத்தில் சித்தி - இருபாலாரும்

**4.பாதுகாப்பு உத்தியோகத்தர்**
க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி - ஆண்கள் மட்டும்

**5.சிற்றூழியர்கள்**

மேற்படி பதவிகளுக்குப் பொருத்தமானவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பால், பிறந்த திகதி, அடையாள அட்டை இலக்கம், விவாகநிலை, கல்வித் தகைமை, பிற தகைமைகள் என்பவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 20.10.2003க்கு முன்னதாக,

**ஆளணி முகாமையாளர்,**
**வலம்புரி,**
**இல.15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு: நிறுவனம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 10 கி.மீ. தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**வலம்புரி** **நிர்வாகஉத்தியோகத்தர்.**


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.